10th
April
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 26 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com



# முஸ்லிம்கள் மீதான பல்வேறு தடைகளை நீக்க நடவடிக்கை

## சாகல, முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பில் இணக்கம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடுத்து முஸ்லிம் சமூகம் தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த பல தடைகளை விரைவில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியும் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகருமான சாகல ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியை ஜனாதிபதி அலுவலகத்தில் முஸ்லிம் சமூக பிரதிநிதிகள் புதன் அன்று காலை சந்தித்து பேசிய போது முன் வைத்த பல பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காணப்பட்டதாகவும்

02ம் பக்கம்பார்க்க...

# பலஸ்தீன் நெருக்கடி முஸ்லிம்களது மட்டுமல்ல ஒரு சர்வதேச பிரச்சினை

## மனித உரிமை ஆர்வலர் களுபஹன இயதிஸ்ஸ தேரர்


பலஸ்தீன பிரச்சினை முஸ்லிம்களின் பிரச்சினை அல்ல. அது ஓர் சர்வதேச பிரச்சினை என மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் அங்கத்தவர் களுபஹன இயதிஸ்ஸ தேரர் கூறினார்.

முஸ்லிம் கவுன்சில் ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் இடம்பெற்ற குதுஸ்தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். முஸ்லிம் கவுன்சிலின் தலைவர்

02ம் பக்கம்பார்க்க...



வாசகர்களுக்கு
இனிய நோன்புப
பெருநாள் நல் வாழ்த்துக்கள்



வாசகர்களுக்கு
சித்திரைப் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்

# பலஸ்தீன் மக்களுக்காக காஸாவில் பாடசாலை

## கட்டுகெலை இஃப்தார் நிகழ்வில் ஜனாதிபதி

இஸ்ரேல் பாலஸ்தீன் யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின் காஸாவில் பாடசாலை யொன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

02ம் பக்கம்பார்க்க...

# பள்ளிவாசல்களுக்கு இன்று விஷேட பாதுகாப்பு

ரமழான் பண்டிகையை முன்னிட்டு பள்ளிவாசல்களின்



02ம் பக்கம்பார்க்க...

# இன்று நோன்புப் பெருநாள்; பிறை கூட்டத்தில் முடிவு




ஹிஜ்ரி 1445 ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு நேற்று 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இதன்போது நாட்டில் பல பாகங்களிலும் ஷவ்வால் மாத தலைப் பிறை தென்பட்டதால் இலங்கை வாழ் மக்கள் புனித நோன்புப் பெருநாளை இன்று புதன் கிழமை 10 ஆம் திகதி கொண்டாடுமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக் குழுத் தலைவர் கலீபதுல் குலபா மௌலவி

02ம் பக்கம்பார்க்க...



அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank


அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

# ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்தை வளரக்கும் தினமாக பெருநாள் அமையட்டும்

இஸ்லாமிய நாட்காட்டியில் ஒன்பதாவது மாதமாகக் கருதப்படும் புனித ரமழான் மாதமானது, முஸ்லிம் சகோதரர்களுக்கு சிந்தனை மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கான மாதமாகக் கருதப்படுகிறது. இந்த ரமழான் மாதம், நல்வாழ்வு மற்றும் நல்வாழ்வின் கலங்கரை விளக்கமாக இருப்பதோடு நம்மிடையே ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்தை வளர்க்கிறது.

சாதி, மத பேதமின்றி இலங்கையர்கள் என்ற வகையில் நாம் அனைவரும் எதிர்கொண்ட இக்கட்டான காலகட்டத்தை கடந்து நாட்டில் நல்லதொரு சூழல் உருவாகியுள்ள இவ் வேளையில் எமது சக முஸ்லிம்களுக்கு ரமழான் பண்டிகையை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வாய்ப்பு இந்த வருடம் கிடைத்துள்ளதையிட்டு நான் ஆனந்தமடைகின்றேன்.

இந்நாட்டில் ரமழான் நோன்பு காலத்தை முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி, அனைவரும்



தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் காலமாக கருதுவதே சரியானதென நான் நினைக்கிறேன்.

தனிமனித முன்னேற்றத்தைப் பொருட்படுத்தாமல், கூட்டுச் சமூக விழுமியங்களை உயர்த்துவதற்காக உருவாக்கப்படும் இவ்வாறான விடயங்கள், வீழ்ச்சியடைந்த இலங்கைப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும், நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்வதற்குமான கூட்டு முயற்சிக்கான அடிப்படையை வழங்கும் என்றும் நான் நம்புகிறேன்.

அர்ப்பணிப்பு, சுயக்கட்டுப்பாடு, சகிப்புத்தன்மை உள்ளிட்ட ரமழானில் முன்னிலைப்படுத்தப்படும் விழுமியங்கள், அதை நோக்கிய பயணத்தில் சரியான வழிகாட்டியாக அமையும் என்ற எதிர்பார்ப்புடன், இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கும், முழு உலக முஸ்லிம் சமூகத்திற்கும் சமாதானம், நல்லிணக்கம் நிறைந்த இனிய ரமழான் பெருநாளாக அமைய இதயப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இன்று....

(முன் பக்கத் தொடர்ச்சி)

எம்.பி.எம்.ஹிஷாம் பத்தாஹி உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் அதன் தலைவர் தாஹிர் ரஷீன் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் பெரிய பள்ளிவாவசலின் பிறைக்கு குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபையின் தலைவர் உள்ளிட்ட பிரதி நிதிகள், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள், வளிமண்டலவியல் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி, ஸ்ரீ லங்கா ஷரீஆ கவுன்சில் பிரதிநிதிகள், ஏனைய பள்ளிவாசல்கள், தரீக்காக்கள், ஸாவியாக்ளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## பள்ளிவாசல்களுக்கு....

(முன் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பிற்காக இராணுவத்தினரை பயன்படுத்த சிறப்பு பாதுகாப்பு திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோனின் பணிப்புரைக்கு அமைவாக, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் குறித்த பாதுகாப்பு திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். சகல பொலிஸ் பிரிவுகளிலும் உள்ள அனைத்து பள்ளிவாசல்களின் மௌலவிகளையும் சந்தித்து சிறப்பு பாதுகாப்பு திட்டம் குறித்து விளக்கமளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய நாடளாவிய ரீதியில் உள்ள 3303 பள்ளிவாசல்களில் மத வழிபாடுகள் நடைபெறும் 2453 பள்ளிவாசல்களுக்கு சிறப்பு பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. அந்த பள்ளிவாசல்களின் பாதுகாப்பிற்காக 5580 பொலிஸ் அதிகாரிகள், 510 சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் 1260 இராணுவத்தினர் உட்பட 7350 க்கும் மேற்பட்ட பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.




# நாட்டின் சொத்துக்களை சூறையாடியவர்கள் மக்கள் அல்ல ராஜபக்ஷ குடும்பம்

## சந்திரிகா அம்மையார்



இந்த நாட்டின் சொத்துக்களை கொள்ளையடித்து வங்குரோத்து நிலைமைக்கு தள்ளியவர்கள் ராஜபக்ஷ குடும்பத்தினரே அன்றி பொதுமக்கள் அல்ல என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம் சாட்டுகிறார் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போது அவர் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை இலங்கையின் அதி உயர்ந்த நீதிமன்றம் கூட உறுதிப்படுத்தியுள்ளது.

ஒருமுறை தோல்வி அடைந்த இக்குடும்பத்தை எமது மக்கள் 69 இலட்சம் பேர் வாக்களித்து தெரிவு செய்தனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

## பலஸ்தீன்....

(முன் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கண்டி கட்டுகெலை ஜும்ஆ பள்ளிவாசலில் ஞாயிறன்று நடைபெற்ற இஃப்தார் நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் காஸா மக்களின் விடிவுக்காக அரசாங்கம் பல்வேறு திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் இம்முறை தேசிய இஃப்தார் நிகழ்வை இரத்துச் செய்து அந்தப் பணத்தை காஸா மக்களுக்கான நிதியத்துக்கு கையளித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம்களின்....

(முன் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பல பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படுவதாகவும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முஸ்லிம் விவகார கூட்டத்தில் கலந்து கொண்ட கொழும்பு பிராந்திய பள்ளி வாசல்கள் சம்மேளன தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான சிராஸ் நூர்தீன் தெரிவித்தார்.

இதில், அமைச்சர் அலி சப்ரி, முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் பைசல் ஆப்தீன் உட்பட சிறைச்சாலை திணைக்கள உயரதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள் கலந்து கொண்டுள்ளார்.

இங்கு மதரஸாக்கள் தொடர்பாக சட்ட வரைபொன்று இயற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மதரஸாக்களில் நிர்வாக பொறுப்பு கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட உள்ளது.

மஹர சிறைச்சாலை பள்ளிவாசல் திருத்தியது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.பள்ளிவாசலை முஸ்லிம்களிடம் கையளிப்பதில் பிரச்சினைகள் இருப்பின் பிறிதொரு காணியில் பள்ளிவாசலை நிர்மாணித்து கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏக்கலையிலுள்ள பள்ளி வாசலை முஸ்லிம்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான ஆவணங்களை பெற்றுக்கொள்ளுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய நூல்களை கண்காணித்து அனுமதி வழங்கும் பொறுப்பினை பாதுகாப்பு அமைச்சிலிருந்து முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திற்கு வழங்குவதற்கு இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## பலஸ்தீன்....

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்.எம் அமீன் தலைமையில் நடைபெற்ற குதுஸ்தின நிகழ்வில் பேசிய களுபஹன தேரர் மேலும் கூறியதாவது,

1979 ஆம் ஆண்டு ஈரான் இஸ்லாமிய புரட்சியின் போது இமாம் கொமேனி பலஸ்தீன மக்களுக்கு ஒருமைப்பாட்டினை தெரிவிப்பதற்காக இதனை பிரகடனப்படுத்தினார்.

ஒரு இஸ்லாமிய நாடு இதை பிரகடனப்படுத்தினாலும் குதுஸ்தினம் ஒரு இஸ்லாமிய விவகாரம் அல்ல. குதுஸ்தின ஸ்தாபகர் இமாம் ருமேனி குதுஸ்தினம் சர்வதேச பிரபஞ்சத்திற்குறிய தினமாகும்.

அது ஒடுக்கப்பட்ட மக்களின் தினமாகும் .இது இஸ்லாமிய பிரச்சினை அல்ல. உலகிலுள்ள சுதந்திரத்திற்காக போராடும் கர்வம் நிறைந்தவர்களுக்கு எதிராக எழுந்து நின்று போராடும் தினமாகும்.

வாங்கொமேனியின் இந்த வார்த்தைகளை அடுத்து உலகெங்கிலும் வாழும் சகல போராளிகளின் சின்னமாக மாறியுள்ளது.வாங்கொமேனி அடக்கப்படும் மக்கள் பக்கமே இருக்கின்றோம்.இஸ்ரேல் பலஸ்தீனம் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளது.

எனவே அவர்கள் பக்கம் நாம் இருக்கின்றோம்.இந்நிலையில் இப்புனித நோக்கத்திற்கெதிராக எவரும் நிற்க முடியாது.

குதுஸ்தினத்தை அனுஷ்டிக்கின்ற 30000 க்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் காசா பகுதியில் கொல்லப்பட்டுள்ளனர்.இந்நிலையில் குதுஸ்தினம் போரினால் அல்ல சகல நாட்களிலும் அனுஷ்டிக்கப்பட வேண்டும்.

அசர வேகத்தில் வலம் வந்து கொண்டிருக்கும் உதயம் பத்திரிகையில் உங்களது நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு: 075 5 840830


அனைவருக்கும்
நோன்புப்
பெருநாள்
நல் வாழ்த்துக்கள்!
THE TRAVELLER
Global Private Limited
AIRLINE TICKETING AGENTS & TOUR OPERATORS


Sapumal®
Since 1977
SAPUMAL
SAFETY WAX MATCHES
SAPUMAL INDUSTRIES (PVT) LTD.
P.O. Box - 20, Mawanella, Sri Lanka. +94 35 2246642 / 2246501 Hotline: +94717 333 444
www.sapumal.com info@sapumal.com /sapumalsrilanka
ISO 9001:2015 | ISO 14001:2015 CERTIFIED COMPANY
Incense Sticks | Incense Powder | Wax Matches | Candles | Air Fresheners | Roll-On Perfumes


நீங்களும் ஒரு சட்டத்தரணியாகலாம்...
Diploma in Law
01 year | Zoom Technology | 75% Scholarship
INSTITUTE OF WORLD ACADEMY
IWA CAMPUS
HND in Law
Diploma in Law பூர்த்தி செய்தவர்களுக்கு
HND in Law கற்கை நெறியினை
ஒரு வருடத்தில் பூர்த்தி செய்யலாம்.
LLB
HND in Law கற்கைநெறியினைப் பூர்த்தி செய்தவர்களுக்கு
LLB யினை Top Up முறையில் 1 வருடத்தில் பூர்த்தி செய்யலாம்.
சட்டத் துறையில் தடம் பதித்திட எம்முடன் இணையுங்கள்...
IWA
Campus
Head Office, C4/4, Hospital Road,
Kalubowila, Dehiwala, Colombo.
(+94) 11 27 19 000 (+94) 77 89 45 898
info@chsiwa.com www.chsiwa.com
iwacampuscolombo
பதிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் உங்கள் முழுப் பெயரினை எங்கள்
WhatsApp இலக்கத்திற்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.
+94 75 85 99 410

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 APRIL 10 - WEDNESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# பண்டிகைகளின் நல்லிணக்கம் நாட்டுக்கு நிரந்தரமாக அவசியம்

பல்லின மக்கள் வாழும் இலங்கை திருநாட்டில் மத நல்லிணக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில் இம்முறை ஏப்ரல் மாதத்தில் தமிழ்,சிங்கள புத்தாண்டும் முஸ்லிம்களின் ரமழான் பண்டிகையும் ஒரே தடவைகளில் தொடர் நாட்களாக வருகின்றமை விசேட அம்சமாகும். அத்தோடு மார்ச் மாத இறுதியில் பெரிய வெள்ளி வழிபாடுகளும் இடம்பெற்றன. இது இலங்கை மதங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் பரஸ்பர நட்புறவையும் ஏற்படுத்த உதவும் வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவது இதுவே முதற்தடவையாகவும் இருக்கலாம். எனவே நாட்டில் பிளவுப்பட்டு சிதறிடிக்கப்பட்டுள்ள மத நல்லிணக்கத்திற்கு இந்நிலைமை பெரும் உந்து சக்தியாக அமையும்.

இலங்கை அனைத்து வளங்களும் நிறைந்த வளமான பூமியாகும். இருந்தபோதிலும் இலங்கை பொருளாதார ரீதியாக முன்னேற முடியாமல் இருப்பதுடன் இப்போது முன்னேறும்.. இப்போது முன்னேறும் என்ற எதிர்பார்ப்புகளுடனே இலங்கை வாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அந்த எதிர்பார்ப்புகள் தற்போதைய தலைமுறையினரிடம் இருந்து அழிந்து போவதை காணமுடிகிறது. ஆனாலும் முன்னேற்றம் எவ்வாறாயினும் இருக்கும் நிலைமையில் இருந்து இன்னும் இன்னும் அதல பாதாளத்தை நோக்கியே இலங்கை சென்ற வண்ணம் உள்ளது. இலங்கையின் அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் தடையாக இருக்கும் பிரதான காரணங்களில் இன்னோரன்ன பல காரணங்களை பட்டியலிடலாம். எனினும் வரலாறு தொடக்கம் இன்றை வரைக்கும் அந்த காரணங்களில் முதன்மை வகிப்பது இனவாதம் என்றால் அது மிகையாகாது. இனவாதத்தின் காரணமாக வளர்ச்சியை நோக்கி செல்லும் நாடு சட்டென்று கீழே சரிந்து வீழ்ந்து விடுகிறது.

பண்டாரநாயக்க ஆட்சியில் தனி சிங்கள மொழி சட்டம் இனவாதத்திற்கு அடித்தளமிட்டது என்றே கூற வேண்டும். அதன் பிற்பாடு தமிழர்கள் சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராக அரசியல் ரீதியாக செயற்பட தொடங்கினர். இந்த சட்டம் சிங்கள பேரினவாதத்தை வெளிக்கொண்டு வந்தது. தமிழர்கள் மற்றும் தமிழ் மொழிக்கு எதிரான போக்கு வெளிப்படையாக முன்கொண்டு செல்லப்பட்டது. இதன் விளைவாக பல கொலைகள்,அசம்பாவிதங்கள் நடந்தேறியது. வடக்கு,கிழக்கில் தமிழ் இளைஞர்களின் எழுச்சி மற்றும் அதனை தொடர்ந்து ஆயுதகுழுவாக பரிணமித்து விடுதலை புலிகள் இயக்கம் தோற்றம் பெற்று இலங்கை பூமி இரத்தம் சிந்தும் போர் பூமியாக மாறியது. 1983 இல் தமிழர்களின் சொத்துக்கள் சூரையாடப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டன. இதன்போது அரசாங்கத்தின் மௌனம் கறுப்பு ஜுலை கலவரத்திற்கு ஆட்சியாளர்களின் ஆதரவை கோடிட்டு காட்டியது. அதன் பின் விடுதலை புலிகள் இயக்கம் வேகம் கண்டது. அதனையடுத்து மாறி மாறி இரத்த

சிந்தப்பட்டது. விடுதலை புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் சிங்கள பேரினவாதிகள் முஸ்லிம்கள் மீது கைவைத்தனர். ஹலால் சின்னத்தை துரும்பு சீட்டாக பயன்படுத்தி இனவாத கக்கப்பட்டது. பொதுபலசேனா என்ற இனவாத விஷமிகளின் கூடாரத்திற்கு ஆட்சியாளர்களும் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் ஆதரவு வழங்கியமை மறைக்க முடியாத உண்மையாகும். இதனையடுத்து பேருவளை, திகன கலவரங்களினால் முஸ்லிம்களின் சொத்துகளும் உடைமைகளும் சூரையாடப்பட்டு, தீக்கிரைக்கு உள்ளாக்கப்பட்டன. இதனால் முஸ்லிம் மத்தியில் அச்சமும் இலங்கை திருநாட்டின் மீதான அதிருப்தியும் முஸ்லிம்கள் மீது வலுவானது. இதனையடுத்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றது. இந்நிலையில் கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்கர்களுக்கு எதிரான போக்கையும் தற்போது காணக்கூடியதாக உள்ளது. மேற்குறிப்பிட்ட இனவாத போக்குகளின் காரணமாக ஏற்பட்ட விளைவுகளினால் பாதிக்கப்பட்டது இலங்கையும் அதன் மக்களுமேயாகும். இதன்காரணமாக நாடு அதல பாதாளத்திற்கே சென்றது.

ஆனால் மதங்கள், இனங்கள் ஒன்றுப்படும் சந்தர்ப்பங்களில் பல வெற்றிகளை இலங்கை தேசம் பெறறுள்ளன. அது நம்நாட்டிற்கு மாத்திரம் விதிவிலக்கல்ல. முழு உலகிலும் அதனை காணமுடியும். பிரித்தானியர்களிடம் இருந்து நாடு சுதந்திரம் அடைய மூவின மக்களும் அதன் தலைவர்களும் ஒன்றுப்பட்டு செயற்பட்டமையினால் இலங்கை பூரணமாக சுதந்திரம் அடைந்தது. அதேபோன்று யுத்தம் நிறைவு பெறுவதற்கும் மூவின மக்களின் ஒத்துழைப்பு பிரதான காரணமாக அமைந்தது. மேலும் முதற்தடவையாக இலங்கை கிரிக்கெட் அணி உலக கோப்பை வென்ற போது, முரளிதரன் என்ற சிறுப்பான்மை ஒருவரின் பங்களிப்பும் அதனையொட்டிய மூவின மக்களின் ஆதரவும் இன்னுமொரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அதனையடுத்து நாட்டை நாசம் செய்த கோட்டாபய ராஜபக்சவை விரட்டியடித்த அரகலய என்ற மக்கள் போராட்டமும் வெற்றி பெறுவதற்கு பேதங்களை மறந்து அனைத்து இன,மதத்தவர்களும் ஒன்றிணைந்தமையே பிரதான காரணமாகும். இதற்கு அப்பால் இயற்கை சீற்றங்களின் போது மூவின மக்களின் ஒன்றுபடுவதினால் மனிதாபிமானத்திற்கு முன் இயற்கை சீற்றம் தோற்றுப்போனது. ஆகவே இனவாதம், மதவாதம், பிரிவிணையே இலங்கைக்கு நீங்காத சூனியமாக உள்ளது. இதனை தகர்த்தெறிய வேண்டும்.

இந்நிலையில் மீளவும் இனவாதத்தை தூண்டும் மறைமுக செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. நாட்டில் ஏற்பட்ட இன முரண்பாடுகளுக்கு பின்னணியில் இருப்பது மக்களல்ல. குறுகிய அரசியல் நோக்கங்களே காரணமாகும். ஆட்சியை தக்கவைக்கவும் ஆட்சியை பிடிப்பதற்கே இனவாதத்தை தூண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன. எனினும் உண்மை நிலைமையை மூவின மக்களும் புரிந்து கொண்டுள்ளனர். ஆனாலும் அரசியலில் உள்ளோர் இனவாதம் என்ற ஆயுதத்தை இன்னமும் கீழே வைக்கவில்லை என்பதே நிஜமாகும்.

மூவின மக்களின் பண்டிகை ஒன்றுசேர்ந்து வருவதின் ஊடாக திடீரென காணாமல் போகும் இன ஒற்றுமை மீண்டும் பலமாக ஆரம்பித்துள்ளது. சிங்களர்வர்களின் விற்பனை நிலையங்களுக்கு தமிழர்களும் முஸ்லிம்ளும் செல்கின்றனர். தமிழர்களின் விற்பனை நிலையங்களுக்கு சிங்களவர்களும் முஸ்லிம்களும் செல்வதோடு, முஸ்லிம்களின் விற்பனை நிலையங்களுக்கு சிங்களவர்களும் தமிழர்களும்ஒ செல்கின்றனர். அண்மையில் முகநூலில் பதிவொன்றை காணமுடிந்தது. புகைப்படத்துடன் கூடிய இந்த பதிவு அனைவரின் அவதானத்தையும் ஈர்த்தது. அதாவது நோன்பு பிடித்து வரும் முஸ்லிம்கள் நோன்பு திறக்க பல சிற்றூண்டி உணவுகளுடன் கூடிய ஏற்பாடுகள் சிங்களவர் ஒருவரின் விற்பனை நிலையத்தில் காணமுடிந்தது. இதனை சிங்கள மக்கள் மத்தியில் பிரபலம் பெற்ற முகநூல் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது. எனவே வெவ்வேறான பண்டிகைகள் ஒன்றுசேர்ந்து வருவதினால் குன்றிய நல்லிணக்கம் மேலோங்குவதை காணமுடிகிறது. இந்த நல்லிணக்கம் நிரந்தர இணக்கமாக ஆக்கப்பட வேண்டும்.

எனவே அனைத்து இனங்களும் ஒன்றிணைந்த போது நாட்டுக்கு கிடைத்த வெற்றிகளையும் இனவாதம் எழுச்சி பெற்றமையால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்புகளையும் ஒப்பிட்டு பார்த்தால் மக்களும் நாடும் செல்ல வேண்டிய பாதை எதுவென்று நன்றாக புரியும். பண்டிகைகள் ஒன்று சேர்ந்து வருவதினால் மாத்திரம் பலனில்லை. பண்டிகை காலங்களில் மேலோங்கும் நல்லிணக்கம் நிரந்தரமாக காக்கப்பட வேண்டும். எனவே இந்த ஏப்ரலில் வரும் பண்டிகையின் நல்லிணக்கம் நாட்டுக்கும் அத்தியாவசியமாகும். இதனை மக்கள் புரிந்துகொண்டு செயற்படுவதுடன் அரசியவாதிகள் இனங்களை தூண்டும் இனவாத ஆயுதம் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு நாட்டின் அபிவிருத்தியை அடிப்படையாக கொண்டு நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதோடு, இனங்களுக்கு இடையில் பிளவுகளை தூண்டுவதை விடுத்து, ஒன்றுபட செய்வது நாட்டுக்கு அத்தியாவசிய தேவை என்பதை வலியுறுத்தி கூற விரும்புகிறோம்.

# நம்பிக்கையுடனும் உளத் தூய்மையுடனும் நாட்டு நலனுக்காக பிரார்த்திப்போம்

## பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் அலி சப்ரி



புனித ரமழான் மாதத்தில் நாம் கடைப்பிடித்த தியாகங்கள், நற்செயல்கள் அனைத்தையும் தொடர்ந்தும் பேணிவர இந்தப் புனிதமான ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தினத்தில் உறுதிபூண வேண்டும். ஒற்றுமை, அமைதி, தியாகம் பரஸ்பரத் தன்மை, பாரம்பரியங்களை கடைப்பிடித்தல் போன்றவைகளின் அடிப்படையில் பசித்திருந்து, விழித்திருந்து செய்த நல் அமல்கள் ஆண்மீகத்தை மேலும் வலுவடையச் செய்து, பூரணமான மனிதநேயம், இரக்கத் தன்மை, விட்டுக்கொடுப்பு போன்றவற்றை எமக்கு கற்பித்துள்ளன.

உள்நாட்டிலும், உலக அளவிலும் நாம் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி சிந்திப்பதுடன், இப் பெருநாள் தினத்தின் மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில், தேவையுடையோருக்கு உதவிக்கரம் நீட்ட அனைவரும் ஒன்றினைய வேண்டும்.

இலங்கையானது, பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் நம்பிக்கைகளின் பன்முகத்தன்மையில் காணப்படும் வலிமைக்கு சான்று பகரும் அதே வேளை, நம் முன்னேற்றங்களின் போது அமைதியான, வளமான மற்றும் இணக்கமான நாட்டை கட்டியெழுப்புவதற்கான கூட்டு முயற்சிகளுக்கும் இப் பெருநாள் தினம் வழிகோலாக அமையட்டும். உலகெங்கிலும் உள்ள எமது உறவுகளிடம் நட்புடனும், நல்லெண்ணத்துடனும் இதனைத் தெரிவிக்கிறேன்.

ஒற்றுமையுடன் நாட்டின் வெற்றிக்காக பாடுபடும் நமது ஒவ்வொரு நிமிடங்களும், ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தினத்தில் பிரார்த்தனைகளாக அமைவதுடன், காஸா மக்களையும் நமது பிரார்த்தனையில் உள்வாங்கி, அவர்கள் படுகின்ற சிரமங்களுக்கு நியாயமான மற்றும் அமைதியான தீர்வை பெற்றுக் கொள்ளவும் பிரார்த்திப்போம்.

நம்பிக்கையுடனும், உளத்தூய்மையுடனும் நாட்டின் எதிர்காலம் சிறக்க பிரார்த்திப்பதுடன், ஒற்றுமை மற்றும் மகிழ்ச்சியின்பால் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடவும் எனது வாழ்த்துக்கள்.

# ஈமானின் பக்குவங்கள் நமது எதிர்காலத்தை உறுதிப்படுத்தட்டும்

## - மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் -

முஸ்லிம்களுக்கு எதிரான ஏகாதிபத்திய போக்குகள் தோல்வியுறுவதற்கு புனித நோன்புப் பெருநாளில் பிரார்த்திக்க வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"பெருநாள் தினமான இன்று நமது எல்லோரதும் ஹலாலான தேவைகள் நிறைவேறட்டும். அல்லாஹ்வின் திருப்தியை எதிர்பார்த்து நோன்பு நோற்று, நல்லமல்கள் செய்த நாம் இந்த ஈமானின் பக்குவத்தை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

நெருக்கடிகள், சோதனைகளின்போது பொறுமை மற்றும் தொழுகையைக்கொண்டு உதவி தேடுவதே சிறந்தது. ரமழானின்



பக்குவங்கள் நமது முன்னேற்றப் பாதைகளுக்கு உறுதியாக அமையட்டும். சர்வதேச அளவில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள சவால்களை முறியடிக்க, ஈமானின் பலத்திலும் பக்குவத்திலும் நாம் அணிதிரள வேண்டும்.

பலஸ்தீன மக்களுக்கு எதிரான ஏகாதிபத்திய போக்குகள் ஒருபோதும் வெல்லப்போவதில்லை. இந்தப் போக்குகளின் அதே சாயலிலே, எமது நாட்டு அரசியலை முன்னெடுக்கவும் சிலர் முயற்சிக்கின்றனர்.

சலுகைகளுக்காக சந்தர்ப்பங்களை நழுவவிடும் அரசியலையும் செய்ய முடியாது.

இவ்வாறு திரைமறைவில் செயற்பட்டு, நமது சந்தர்ப்பங்களை கபளீகரம் செய்வோருடன் இணங்கிச் செல்லும் நிலைப்பாட்டில் நாங்கள் இல்லை. சமூகங்களை நேசிக்கின்ற, சிறுபான்மையினரையும் சம அந்தஸ்த்தில் அரவணைக்கும் அரசியல் கோட்பாடுகளைப் பலப்படுத்துவதே தமது நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



**ஜம்மியதுஷ் ஷபாப் (யுஅலள) நிறுவனத்தில் இடம்பெற்ற இஃப்தார் நிகழ்வில் சவூதி அரேபியாவுக்கான இலங்கை தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் அஷ்ஷெய்க் ஓ.எல்.அமீர் அஜ்வத் (நளீமி)க்கு கௌரவ நினைவுச் சின்னமொன்று (யுஅலள) பணிப்பாளர் மௌலவி எம்.எஸ்.எம்.தாஸிமினால் வழங்கப்பட்ட போது.படத்தில் தேசிய சூரா கவுன்சில் தலைவர் சட்டத்தரணி ரீ.கே அஸூர் கொழும்பு மாவட்ட பள்ளிவாசல் சம்மேளன தலைவர் சட்டத்தரணி ஸிராஸ் நூர்தீன் ,யுஅலள பிரதிப் பணிப்பாளர் ஏம.ஜே.எம்.வாரித், முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் இஸட்.ஏ.எம் பைஸல் ஆகியோரையும் காணலாம்.**

www.uthayam.lk

# கஹட்டோவிட்டாவை சேர்ந்த சகோதரர் ஷாஜஹான்

## சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கான நிதியுதவி கோரல்



கஹட்டோவிட்டாவை சேர்ந்த சகோதரர் ஷாஜஹான் அவர்களின் இறு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டுள்ளதால் உடனடியாக சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும் என வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

மூன்று குழந்தைகளின் தகப்பனாரான இவருக்கு வயது 43 சாதாரண தொழில் ஒன்றையே செய்து வரும் இவருக்கு குழந்தைகளின் படிப்பு செலவுக்கும், சாப்பாட்டு தேவைகளுக்குமே போதாத பொருளாதார நிலையில் காணப்பட்ட இவருக்கு தற்போதைய நோய் வீரியம் காரணமாக எதுவுமே செய்ய முடியாது வீட்டிலேயே ஓய்வெடுத்து வருகின்றார்.

கிழமைக்கு மூன்று னுலயடயளளை செய்ய தேவையிருப்பினும் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியினாலும், ஜனாதிபதி நிதியத்தாலும் வழங்கப்படும் இரண்டு னுலயடயளளை மாத்திரமே செய்யப்படுவதாகவும் இன்னும் ஒரு னுலயடயளளை செய்வதற்கு வைத்தியர்கள் சிபாரிசு செய்துள்ளதாகவும் அதற்கான செலவு ரூபாய் 12000 வரை காணப்படுவதாகவும் எதிர் கொண்டுள்ள இக்கட்டான நிலை காரணமாக அதனை செய்ய முடியாது இருப்பதாகவும், மருந்து மாத்திரைகளால் இவற்றை குணப்படுத்த முடியாது என்பதனால் உடனடியாக சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வைத்தியர்கள் தெரிவிப்பதாகவும் சகோதரர் ஷாஜஹான் தெரிவிக்கார்.

தனக்கு தேவையான O positive சிறுநீரக வழங்குனர் இன்னும் தேடிக்கொண்டு இருப்பதாகவும் யாராவது கிடைத்தால் உடனடியாக சத்திரி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கிறார்.

எனவே, இதற்காக சுமார் 65 முதல் 70 இலட்சம் வரையான பெரிய நிதித்தொகை தேவைப்படுவதாகவும் இதனை தன்னால் மேற்கொள்ளும் வசதி இல்லாத காரணத்தால் பொதுமக்களின் உதவியை இதற்காக நாடுவதாகவும் தெரிவிக்கின்றார்.

எனவே, குறித்த சகோதரரின் அவசர தேவையை உணர்ந்து இந்த புனித ரமழான் மாதத்தின் இறுதி தருவாயில் உங்களது ஸதகாக்கள்,ஸ காத்களை குறித்த சகோதரரின் மேற்படி தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கும் உயிராபத்தில் இருந்து அவரை காப்பாற்றி சந்தோசமாக அவரை குடும்பத்துத்துடன் வாழ்வதற்கும் உங்களால் முடிந்த உதவிகளை வழங்கி ஒத்துழைப்பு நல்குமாறும் கஹட்டோவிட்ட நியுஸ் பேஜ் ஒபீஸியல் தளம் மேற்படி சகோதரரின் விடயம் உண்மையானது என்றும் அதற்காக அனைவருக்கும் தம்மாலான அனைத்து நிதி உதவிகளையும் வழங்கி வல்லவன் அல்லாஹ்வின் மேலான நற்கூலியை பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

உங்கள் உதவித்தொகையை கீழுள்ள அவரது மனைவியின் கணக்கிலக்கத்துக்கு வைப்பிலிடுமாறும் வைப்பிலிடப்பட்டது பற்றி உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும் எனில் கீழுள்ள இலக்கத்துக்கு தொடர்பு கொண்டோ குறும் செய்தி அல்லது வட்ஸப் மூலம் தெரிவிக்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


**கணக்கிலக்கம்**

மக்கள் வங்கி
நிட்டம்புவ கிளை
278200150084790.

எம்.ஏ.எப் மஸ்லியா
தொலை பேசி இலக்கம்.
0703790623

இதனை அதிகம் பகிர்ந்து உங்களால் முடிந்த உதவியை செய்து இவருக்கு தேவையான நிதியை திரட்டி கொள்வதற்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எம்.ஆர்.லுதுபுள்ளாஹ்
கஹட்டோவிட்ட நியுஸ் பேஜ் ஒபீஸியல்




# அறிவுச் சுரங்கம் பொது அறிவுப் போட்டியில்

## காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர்கள் வெற்றி





(அஷ்ரப் ஏ சமட்)

ரமழான் மாதத்தை முன்னிட்டு கொழும்பு கொம்மியுனிடி நிறுவனம் வருடம் தோறும் நாடளாவிய ரீதியில் நடத்தி வரும் அறிவுச் சுரங்கம் பொது அறிவுப் போட்டி நிகழ்ச்சி இம்முறை கொழும்பு 10 அல்ஹிதாயா கல்லூரியின் எம்.ஸி. பஹார்தீன் மண்டபத்தில் நடைபெற்றது.

நாடளாவிய ரீதியாக நடைபெற்ற இப்போட்டி நிகழ்ச்சியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற திருகோணமலை வெள்ளை மணல் அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி மாணவர்களுக்கும், காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர்களுக்குமிடையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர்கள் வெற்றி பெற்று முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இரண்டாம் இடத்தை திருகோணமலை அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி மாணவர்களும், மூன்றாம் இடத்தை ஹெம்மாதகம அல் அஸ்ஹர் கல்லூரி மாணவர்களுக்கும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

முதலிடத்தைப் பெற்று வெற்றியீட்டிய மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டதோடு இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாவும் வெற்றிக் கிண்ணமும், மூன்றாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாவும் பதக்கமும் சான்றிதழ்களும் கொழும்பு கொம்மியுனிடி நிறுவன தலைவர் எம்.ஸி. பஹார்தீன் யினால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக எம்.ஸி. பஹார்தீன், விஷேட அதிதிகளாக ஸஹ்ரியா பஹார்தீன், பாஸித் பஹார்தீன் ஆகியோரும் கௌரவ அதிதிகளாக கொழும்பு 10 அல்ஹிதாயா கல்லூரியின் அதிபர் ஏ.எப். ஸரூனா, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பிரிவின் பொறுப்பாளர் பாத்திமா றினூஸியா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.



# ஈத் என்பது மகிழ்ச்சி கொண்டாட்டத்துக்கான நாள்

## பெருநாள் வாழ்த்து செய்தியில் சவூதி தூதுவர்



அருள் நிறைந்த ஈதுல் பித்ர் திருநாளில் இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி தெரிவித்துள்ளார்.

ஈதுல் பித்ர் வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஈத் அல்-பித்ர் திருநாள் என்பது மன்னிப்பு, அன்பு மற்றும் இரக்கத்திற்கான நாளாகும். இக்குணாதிசயங்கள்தான் இஸ்லாத்தின் அடிப்படை.

ஈத் என்பது மகிழ்ச்சி மற்றும் கொண்டாட்டத்தின் நாள் அயலவர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருடனும் சமாதானம் பேணவேண்டிய நாள்.

இந்த மங்களகரமான சந்தர்ப்பம், உறவுமுறை, சமாதானம் ஆகியவற்றின் பிணைப்பை புத்துயிர் பெறச்செய்வதற்கும், ஒருவருக்கொருவர் சகிப்புத்தன்மை மற்றும் அன்பை வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கிறது.

இந்த நன்நாள் அனைவருக்கும் அமைதி, மகிழ்ச்சி மற்றும் செழிப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

# இலங்கைக்கு விமானங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கை விமான சேவைகள் கடந்த கால நிலைமையில் இருந்து அதனைக் கட்டியெழுப்புவதற்காக ஏ320 எனும் 4 விமானங்களை இலங்கைக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வாங்குவதற்கு அமைச்சின் ஊடக நடவடிக்கை எடுத்தோம். அதன் ஊடாக தற்பொழுது இலங்கை விமான சேவைகள் சிறிது சிறிதாக கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது. என துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபல டி சில்வா தெரிவித்தார்.

துறைமுக அபிவிருத்தி அமைச்சில் நடாத்திய ஊடக மாநாட்டிலேயே மேற்கண்ட தகவல்களைத் அமைச்சர் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்

கடந்த வாரம் சில ஊடகங்கள் பிழையான தகவல்களையும் பொய்யான கருத்துக்களையும் பிரசுரித்து மக்களை பிழையாக வழி நடத்துகின்றன. இந் நிறுவனங்கள் பற்றி சரியான தகவல்களை தெரிவிக்கவே இந்த விசேட ஊடக மாநாட்டினை ஏற்பாடு செய்தோம்.




# 2024 அரச ஓவிய சிற்ப விழாவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(ஐ. ஏ. காதிர் கான்)

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக் கழகம், மற்றும் அரச கட்புலக்கலை ஆலோசனைக் குழு என்பன ஏற்பாடு செய்துள்ள, 2024 அரச ஓவிய சிற்ப விழாவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விண்ணப்பங்களை 2024 ஜூலை மாதம் 25 ஆம் திகதி வரை அனுப்பி வைக்க முடியும் என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். விண்ணப்பப்படிவங்களை, கலாசார உத்தியோகத்தர் - மாவட்ட செயலகம் அல்லது கலாசார உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் அல்லது கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

www.culturaldept.gov.lk என்ற இணையத்தள முகவரி ஊடாகவும், DEPARTMENT OF CULTURAL AFFAIRS என்ற முகநூல் பக்கம் ஊடாகவும் அல்லது அரச கட்புல கலை ஆலோசனைக்குழு (011-2882551) ஊடாகவும் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

# மாவனல்லை திடீர் மரண விசாரணை அதிகாரியாக முஹம்மது மசூர் நியமனம்

(பாரா தாஹிர்)

கடுகண்ணாவையை பிறப்பிடமாகவும், மாவனல்லையை வசிப்பிடமாகவும் கொண்ட எம். ஆர். முஹம்மது மசூர் மாவனல்லை நீதிமன்ற நீதிவான் டப்லியூ. ஏ. எஸ். அனுராத வீரக்கொடி முன்னிலையில் திடீர் மரணவிசாரனை அதிகாரியாக அண்மையில் பதவி ஏற்றுக் கொண்டார்.

இவர் தனது ஆரம்ப கல்வியை இலுக்குவத்தை முஸ்லிம் வித்தியாலயத்திலும், சாதாரணதர கல்வியை கண்டி புனித சில்வஸ்டர் கல்லூரியிலும், உயர் தர கல்வியை மாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலையிலும் கற்று தேரினார். தனது பட்டப்படிப்பையும், மொழிப்பெயர்பாளர் கற்கைநெறியையும் பேராதனை பல்கலைகழகத்திலும் கற்றார்.

கண்டி அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் மற்றும், கண்டி



பிரதேச செயலகத்திலும் 30 வருடங்களாக பணிபுரிந்த இவர் கடுகண்ணாவ இலுக்குவத்தையை சேர்ந்த மர்ஹூம் எச்.எல்.எம். ரசீத் மற்றும் சித்தி ஹூசைனா ஆகியோரின் புதல்வரும் ஆவார்.

# அமெரிக்கா கவிதைப் போட்டியில் மூதூர் வளர்கவி வெற்றி

அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவையின் நூறாவது “அன்பு மலரட்டும்” எனும் தலைப்பில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் மூதூரைச் சேர்ந்த வளர்கவி சாகுல் ஜஹைறம் கலந்துகொண்டு வெற்றியாளராகத் தெரிவாகியுள்ளார். இவரது கவிப்புலமையைப் பாராட்டி



அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவை இவருக்கு “முத்தமிழ் பேராளர்“ எனும் விருது வழங்கி கௌரவித்துள்ளது. இக்கவிஞரின் படைப்பாகிய “மலைத்தேன்“ என்ற கவிதை நூல் அண்மையில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் பாடசாலைகள் எதிர்நோக்கும் ஆசிரியர் பற்றாக்குறையும், பௌதீக வள குறைபாடுகள் பற்றி ஊடக சந்திப்பு

(அஷ்ரப் ஏ சமத்)

கொழும்பு மாவட்டத்தில் முஸ்லிம் பாடசாலைகளில் நீண்ட காலமாக எதிர்நோக்கும் ஆசிரியர் பற்றாக்குறையும் மற்றும் பாடசாலைகளில் பௌதீக வள குறைபாடுகள் பற்றி ஊடக சந்திப்பு மேல் மாகாணத்தின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அர்சத் நிஜாமுதீன் தலைமையில் அண்மையில் (02) இடம்பெற்றது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை இவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

கொழும்பு மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினர் பாடசாலைகளில் பாரியளவில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகிறது. அன்மையில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பரீட்சை நடாத்தப்பட்டு 600 ஆசிரியர்கள் பரீட்சை எழுதினார்கள் அதில் 115 ஆசிரியர்கள் மட்டுமே சித்தியடைந்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் 20 பிரதி அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஓர் பிரதி அதிபர் நியமிக்க 500 மாணவர்கள் அப்பாடசாலையில் இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றனர் ஆனால் 300 மாணவர்கள் உள்ள சிங்களமொழிப் பாடசாலைகளில் இரண்டு பிரதி அதிபர்கள் உள்ள பாடசாலையும் உண்டு ஆனால் தமிழ் மொழிப் பாடசாலைகளில் 600 -750 க்கும்




மேற்பட்ட மாணவர்கள் உள்ள பாடசாலைகளில் பிரதி அதிபர்கள் நியமிக்கப்படவில்லை.

இவ் விடயம் சம்பந்தமாக கடந்த வாரம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானும் நானும் இணைந்து மேல்மாகாண ஆளுநர் மற்றும் பிரதிச் செயலாளர்கள் கல்வி அதிகாரிகளையும் சந்தித்து இவ்விடயங்கள் பற்றிப் கலந்துரையாடினோம். அத்துடன் எமது கொழும்பு வாழ் சிறுபான்மையினர் பாடசாலைகளில் ஆசிரியர் கோரிக்கைகளையும் முன்வைத்தோம்.

500க்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்ள முஸ்லிம் பாடசாலைகளில் பிரதி அதிபர்கள் நியமிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன். கடந்த நல்லாட்சியில் பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க அப்போது ஆசிரியர்களை நியமிப்பதாக கூறினார். அதனையும் நியமிக்கும் படியும் கொழும்பு வாழ் சிறார்களின் கல்விக்கு புத்துயிர் அளிக்கும்படியும் அர்சத் நிசாமுடீன் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டார்.

தற்பொழுது உள்ள சகல முஸ்லிம் பாடசாலைகளிலும் இடப்பற்றாக்குறையும் பௌதீக பற்றாக்குறையும் உள்ளது. அதற்காக கொழும்பில் வாழ் முஸ்லிம் புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் வர்த்தகர்கள் இத்திட்டத்திற்கு முன் வருதல் வேண்டும் எனவும் அர்சத் நிஜாமுத்தீன் வேண்டிக் கொண்டார்.

# இந்தியாவில் மோடி தலைமையிலான இந்துத்துவா கருத்தியல் ஆட்சி மீண்டும் மூன்றாம் முறையாக ஆட்சியை கைப்பற்றுமா?



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist,
Chennai - Tamilnadu, India)

இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு. உலகின் மிகப்பெரிய ராணுவம் மற்றும் மக்கள் பலத்தை கொண்ட தேசம் . அதேநேரத்தில் இந்த நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம், பண்பாடு போன்றவைகள் சர்வதேச நாடுகள் மூலம் இன்றும் தொடர்ந்து கவனிக்கப்படும் சூழல் தான் காணப்படுகிறது. இந்த பெருமையை பெறுவதற்கு மிகவும் முக்கியமான காரணியாக இருப்பது எல்லாவிதமான தத்துவம், மத நம்பிக்கைகள், சடங்குகள் சம்பிரதாயங்கள் என்று எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்ட தேசம் என்பதால் தான் இந்தியாவிற்கு இத்தனை சிறப்புகள் உள்ளதாக நம்பப்படுகிறது.

இந்த நிலையில் தான் வருகின்ற 2024 நாடாளுமன்றத்திற்கான பிரதமரை தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய சூழ்நிலையில் இந்த மாதம் அதாவது ஏப்ரல் 19 தேதி முதல் கட்டமாக வாக்கு பதிவு நடைபெற இறுதி கட்ட பிரச்சாரம் நடந்து வருகிறது. இந்தியாவில் மொத்தம் 95 கோடிக்கு மேல் வாக்காளர்கள் இருப்பதால் தான் இது உலகின் மிகப்பெரிய தேர்தல் திருவிழாவாக இருக்கக்கூடும் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையில் இந்தியாவில் 28 க்கு மேற்பட்ட மாநிலங்கள் மற்றும் குறைந்த அதிகாரம் கொண்ட யூனியன் பிரதேசங்கள் முழுவதுமாக இந்த தேர்தலில் பங்கு கொள்ளும் நிலை காணப்படுகிறது. ஒட்டு மொத்த இந்திய தேசத்தில் மிகப் பெரிய கட்சியாக இந்து தேசியத்தை அடிப்படை கூறுகளாக கொண்ட பாரதிய ஜனதா கட்சியும் அதன் கூட்டணிகளும் அதனைத் எதிர்த்து காங்கிரஸ் கட்சியின் தலைமையில் ஆன ஐ.டேனு.யு. கூட்டணி மற்றொரு பக்கமும் தற்போது போட்டியை எதிர் கொள்ளும் நிலை காணப்படுகிறது.

இந்த முறை பிரச்சாரம் இரண்டு கூறுகளாக அமைந்துள்ளது. பாஜகவின் பிரதமர் வேட்பாளராக பிரதமர் நரேந்திர மோடி போட்டி இடுகிறார். இதில் எந்த குழப்பமும் அவர்களுக்கு இல்லை. அதேநேரத்தில் தேசிய அளவில் காங்கிரஸ் கட்சி வலுவிழந்த நிலையில் அதன் தலைமை மாநில கட்சிகள் உடனான கூட்டணி அமைத்து போட்டியிடுவது தான் தற்போதைய நிலையாக இருக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் கூட்டணியில் 28 க்கு மேற்பட்ட சிறிய மற்றும் பெரிய கட்சிகள் போட்டியிடுவது ஏறக்குறைய உறுதியான நிலையில் நாடு முழுவதும் அவர்கள் பிரச்சாரத்தின் முடுக்கி விட்டுள்ளது தான் தற்போதைய நிலையாகும்.

கடந்த இரண்டு தேர்தல்களில் 2014 மற்றும் 2019 ஆண்டு பிரதமர் நரேந்திர மோடியின் தலையில் ஆன பாஜக இந்து தேசிய கட்சி அபாரமாக வெற்றி பெற்று ஆட்சி செய்து வருகின்றனர்.

குறிப்பாக 2014ம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் மற்றும் கருணாநிதி தலைமையிலான தி.மு.க கட்சி கூட்டணி மாபெரும் தோல்வியை சந்தித்தார்கள். அதே போன்று 2019 ம் ஆண்டு தேர்தலிலும் நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசு மீண்டும் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தை கைப்பற்றி ஆட்சியமைத்தது.

அதே போன்று இந்த முறையும் 2024ம் ஆண்டு வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள பிரதமர் நரேந்திர மோடி மிகவும் கடுமையாக உழைத்து வருவதைக் காண கூடியதாக இருக்கிறது. இதற்கு மிக முக்கியமான காரணியாக இருப்பது இந்த முறை வெற்றி பெற்று இந்திய தேசத்தை இந்து அடிப்படைவாத சித்தாந்தம் கொண்ட தேசமாக பிரகடனம் செய்து விட அவர்கள் முனைந்து வருவதாக எதிர் கட்சிகள் மிகவும் கடுமையாக குற்றச்சாட்டுகளை அவர்கள் மீது அடுக்கி வைக்கிறார்கள். அதாவது மீண்டும் மூன்றாம் முறையாக பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசு வெற்றி பெற்றால் இந்தியாவில் ஜனநாயகம் முழுமையாக துடைத்து எறியப்படும் என்று ராகுல் காந்தி மற்றும் எதிர் கட்சிகள் தொடர்ந்து மிகவும் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர்.

கடந்த 10 ஆண்டுகள் பாஜக வின் ஆட்சி மூலம் இந்தியாவின் சாதனையாக பல்வேறு துறைகளில் வளர்ச்சி குறித்து எல்லாம் பாடம் எடுத்து வரும் நரேந்திர மோடியின் பேச்சுக்களை எதிர் கட்சிகளின் தலைவர்கள் முழுமையாக மறுத்து வருகின்றனர். உலகத்திலேயே மிகப்பெரிய பொருளாதாரம் மற்றும் சந்தையை தன்னகத்தே கொண்டுள்ள இந்தியாவின் அணுசரணை தேவை என்பதை சர்வதேச நாடுகள் குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் உணர்ந்து கொண்டு வருவதைக் காண கூடியதாக இருக்கிறது. இந்திய பொருளாதாரம் இந்த ஆண்டு 6.4 சதவீதத்தை எட்டியுள்ள நிலையில் பல்வேறு துறைகளில் வளர்ச்சி அடைந்து விட்டதை போன்ற மாயமான பிம்பத்தை மோடி அரசு கட்டமைத்து வருவதாக எதிர் கட்சிகள் மிகவும் கடுமையாக குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றனர்.

அதாவது பிரதமர் நரேந்திர மோடி எல்லா முடிவுகளையும் தன்னிச்சையாக எடுக்க கூடிய நிலையில் அவரது சகாக்கள் பலரும் அவரை விட்டு முழுமையாக விலகிய நிலையில் மூத்த தலைவர்கள் பலரும் முழுமையாக ஒதுக்கப்பட்டு விட்டதாக அவர் மீது இந்துத்துவா சித்தாந்தத்தை முழுமையாக ஏற்றுக் கொண்ட சர்வதேச பொருளாதார நிபுணர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி மிகவும் கடுமையாக குற்றம் சாட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. பாஜக வின் தாய் அமைப்பாக செயற்படும் ஆர் எஸ் எஸ் அமைப்பின் தலைமை ஒரு கட்டத்தில் நரேந்திர மோடியின் போக்கை கட்டுப்படுத்த வழியின்றி தத்தளித்து வருவதாக மூத்த ஊடகவியலாளர்கள் கடுமையான குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றனர்.



**மோடி மீது இந்தியாவில் எதிர் கட்சிகள் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள்...**

2016 ம் ஆண்டு ஒரே இரவில் யாரிடமும் சொல்லாமல் பண மதிப்பிழப்பு காரணமாக இந்தியாவில் நடுத்தர வர்க்கம் மற்றும் தொழில் துறை சமூகங்கள் இன்று வரை மிகவும் கடுமையான தொடர் பாதிப்புகளை சந்தித்து வருகிறது.

ஜிஎஸ்டி வரி சட்டத்தின் மூலம் பெரும்பாலான மக்கள் சிறு, குறு தொழில் துறை சமூகங்கள் மிகவும் கடுமையான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் மத வெறி அரசின் மூலம் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தை சார்ந்த ஏழை முஸ்லிம்கள் வட இந்திய மாநிலங்களில் மிகவும் கடுமையாக பாதிப்படைந்துள்ளனர். இந்த அநியாயங்களை எதிர் கட்சிகள் தொடர்ந்து மோடி அரசு மீது குற்றம் சாட்டாக பதிவு செய்து வருகின்றனர்.

வட கிழக்கு மாநிலமான மணிப்பூரில் நடந்து கலவரம் இன்றும் மோடி அரசுக்கு மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்று அரசியல் வல்லுனர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

மோடி அரசின் ஜாம்பவானாக பார்க்கப்படும் உள்துறை அமைச்சர் அமீத் ஷா மிகவும் கடுமையான வெறுப்பை முஸ்லிம் சமூகத்தின் மீது பொது களத்தில் பதிவு செய்யக்கூடிய வெறுப்பு அரசியல்வாதி என்பதும் அனைவரும் அறிவோம். அதே நேரத்தில் இந்திய மாநிலங்களில் வாழும் முஸ்லிம் சமூகத்தை சார்ந்த மக்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட சட்டம் தான் ஊயுயு , சேீ ஆகிய சட்டங்கள் ஆகும். சுருக்கமாக சொல்வதென்றால் அயலகத்தில் இருந்து இந்தியாவில் குடியேற முயன்றால் முஸ்லிம்களுக்கு குடியுரிமையை மோடி அரசு முழுமையாக மறுக்கிறது.கடந்த 2020 ஆம் ஆண்டு கொராணா தொற்று ஏற்படுத்திய கடும் பாதிப்புக்கு முன் இந்த சட்டத்தை எதிர்த்து போராடியவர்கள் பலர் வட இந்திய மாநிலங்களில் சுட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். டெல்லி ஷாஹின் பாங் போராட்டத்தில் அமைதியாக போராட்டத்தில் ஈடுபட்ட முஸ்லிம்கள் மீது வெறித்தனமாக தாக்குதலை ஏவி 52 அப்பாவி பொதுமக்கள் கொன்று குவித்த வரலாற்றை இந்திய பொது ஜனம் என்றும் மறக்க முடியாது

இந்தியாவில் மிக முக்கியமான அரச ஏஜென்சிகளாக செயல்படும் CBI, NIA, ஐவு, நுனு போன்ற பல்வேறு துறைகளை அதிகாரத்தின் மூலம் கட்டுப்படுத்தி எதிர் கட்சிகளை மோடி அரசு முழுமையாக சூறையாடி வருவதாக தற்போது கொந்தளிப்பான நிலைமை காணப்படுகிறது.

மோடி அரசால் குற்றம் சாட்டப்பட்ட ஏராளமான ஊழல் அரசியல்வாதிகளை மிரட்டி பணிய வைத்து தன்னுடன் தேர்தல் பங்காளியாக சேர்த்து கொள்கிறார்கள் என்று இந்தியாவில் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ், திமுக, இடதுசாரிகள் மிக கடுமையாக குற்றம் சாட்டி வரும் நிலையில் பிரதமர் நரேந்திர மோடி எதனை குறித்தும் கிஞ்சிற்றும் கவலைபடாமல் எதிர் கட்சிகள் முகாமை காலி செய்வதில் மிகவும் கவனத்துடன் செயல்பட்டு வருவதாக பிபிசி.... நியூயார்க் டைம்ஸ்....அல்ஜெஸிரா..வாஷிஙாடன் போஸ்ட் போன்ற சர்வதேச நாளிதழ்கள் கூட கடுமையான குற்றச்சாட்டுகளை பதிவு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தியாவில் தேர்தல் நடந்தால் மொத்தம் உள்ள 543 தொகுதிகளுக்கு 272 எடுக்கும் கட்சிதான் தனித்துவமான மெஜாரிட்டியை பெற்று ஆட்சி அமைக்க முடியும் என்பதே அரசியல் அமைப்புச் சட்டத்தின் முறைமையாகும். இந்த நிலையில் தான் இந்தியாவில் உள்ள பெரும்பாலான மாநிலங்களில் உள்ள கட்சிகள் இணைந்து உருவாக்கப்பட்ட ஐ.டேனு.ஐ.யு . கூட்டணி பலம் வாய்ந்த ஒன்றாக விளங்குகிறது.இருந்த போதிலும் தென் இந்தியாவில் உள்ள மாநிலங்களில் குறிப்பாக தமிழ் நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் மோடி தலைமையிலான பிஜேபி ( BJP) பலம் இல்லாத நிலையில் வட இந்திய மாநிலங்களில் பாஜக அதிகம் இடங்களில் வெற்று ஆட்சி அமைக்க முடியும் என்று பிரதமர் நரேந்திர மோடி உறுதியாக நம்புகிறார்.

இந்த நிலையில் மோடி அரசு முழுமையாக சர்வாதிகார தன்மையை வெளிப்படுத்தும் வகையில் எதிர் கட்சிகள் ஒற்றுமை சீர்குலைக்கும் வகையில் நடந்து வருவதாக எதிர் கட்சிகள் மிகவும் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர்.

இதனை மெய்ப்பிக்கும் வகையில் எதிர் கட்சிகளை மிரட்டும் தொனியில் பல்வேறு வகையான வழிகளில் வழக்குகளை அவர்கள் மீது பதிவு செய்து அவர்கள் பிணையில் வெளியே வர முடியாத அளவுக்கு மிகவும் கடுமையான பிரிவுகளில் சிறையில் அடைக்கப்பட்டு வருவதைக் காண கூடியதாக இருக்கிறது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய பாஜக அரசு விரும்பினால் ஒருவரை பரிசுத்தமான மனிதனாக பார்க்கலாம்.

எதிர் கட்சிகளை சேர்ந்த அரசியல்வாதிகளை அதாவது அவர்கள் மீது புனைவு செய்யப்பட்ட போலி வழக்குகள் மூலம் நிரந்தரமாக சிறையில் அடைக்கப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

இது போன்ற பிரச்சினை இநதியாவை தாண்டி சர்வதேச நாடுகள் மத்தியில் பேசும் பொருளாக மாறி உள்ளது குறிப்பிடத்தக்கது. இதனை தொடர்ந்து அமெரிக்கா, ஜெர்மன் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை இந்தியாவில் நீதி மற்றும் ஜனநாயகத்தை காக்கும் வகையில் சரியாக நடந்து கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்த நிலையில் இந்த கருத்துகள் மோடி அரசு மீது மிகவும் கடுமையான பின்னடைவை ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக சர்வதேச நாடுகளின் செய்தி ஏடுகள் கூறுகின்றன.

அதேநேரத்தில் இந்தியாவில் உள்ள பெரும்பாலான ஹிந்தி மற்றும் ஆங்கில செய்தி சேனல்கள் மோடி அரசின் ஊது குழலாக மாறி விட்டது என்பதே உண்மையாகும். இந்தியாவில் மீடியா ஜர்னலிஷம் மிகவும் மோசமான நிலையை அடைந்து வருவதைக் தான் நம்மால் பார்க்க முடிகிறது.

இந்த சூழ்நிலையில் தற்போது நரேந்திர மோடியின் தலைமையில் ஆன அரசுக்கு இந்த உச்சநீதிமன்றம் மிகவும் கடுமையான நெருக்கடியை தொடர்ந்து ஏற்படுத்தும் விதமாக அவர்களின் தீர்ப்புகள் சமீபத்திய நாட்களில் வெளியாகி வருவது ஜனநாயக சக்திகளுக்கு மிகுந்த மன மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக நம்மால் உணர முடிகிறது. குறிப்பாக மோடி அரசு பெரும் செல்வந்தர்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் இருந்து பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடையாக பெற்றுள்ளார்கள். பாரதிய ஜனதா கட்சி மட்டுமே மொத்த தொகையில் 52 சதவீதம் அளவுக்கு பெற்றுள்ளார்கள். இந்திய மதிப்பில் 12,5000 கோடி ரூபாய் அளவுக்கு பெற்று பெரும் முதலாளிகளுக்கு அவர்கள் நடத்தும் தொழில் நிறுவனங்களுக்கு சாதகமான முறையில் பல இலட்சக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள டெண்டர்களை வழங்கி உள்ளது தற்போது இந்தியாவில் பெரும் பேச்சு பொருளாக மாறி வருகிறது. பா ஜ க விற்கும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் கொடுக்கப்படும் நன்கொடை தொகையை யாரும் அறிந்து கொள்ள தேவையில்லை என்று நரேந்திர மோடி தலைமையிலான மத்திய பாஜக அரசு சட்ட திருத்தம் கொண்டு வந்தது.

இந்த நிலையில் தான் இந்திய உச்சநீதிமன்றம் இந்தியாவின் மிகப்பெரிய வங்கியான ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ( State Bank of India) உடனடியாக அணைத்து கணக்கு வழக்குகளையும், பரிவர்த்தனைகளை அனைவரும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும் வகையில் வெளியிட வேண்டும் என்று உத்தரவிட்டது.

தற்போது வெளியாகி உள்ள இந்த இலட்சக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள டெண்டர்களை எந்தெந்த நிறுவனங்கள் மோடி அரசுக்கு லஞ்சம் கொடுத்து பெற்றுள்ளார்கள் என்பதை இந்திய பொது ஜனம் முழுமையாக தெரிந்து கொண்டது மோடி அரசுக்கு இந்த தேர்தலில் மிகுந்த பின்னடைவை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் மூன்றாவது முறையாக எப்படியும் வெற்றி பெற்று விட வேண்டும் என்று ஆர் எஸ் எஸ் அமைப்பின் தலைமை மற்றும் பாஜக வும் மிக கடுமையாக போராடி வருகின்றனர். மோடி அரசின் மீது ஊழல், மத வாதம் என்று பேசுவதற்கு எத்தனையோ விடயங்கள் மலை போல் குவிந்து கிடக்கும் நிலையில் இதனைத் சரியான முறையில் பயன்படுத்த முடியாமல் போனதற்கு எதிர் கட்சிகளின் ஒற்றுமையின்மை மிகவும் முக்கியமான காரணியாக விளங்குகிறது.

இது தான் நரேந்திர மோடிக்கு மிகவும் பலமாக அமைந்துள்ளது. அதேநேரத்தில் ராகுல் காந்தி மற்றும் எதிர் கட்சிகள் இணைந்து எல்லா நிலைகளிலும் போட்டியிட்டால் நிச்சயமாக மோடியை தோற்கடிக்க முடியும்.

ஆனாலும் எதிர் கட்சிகள் ஒற்றுமை இன்னும் பல்வேறு வழிகளில் அதிகரித்து இருந்தால் மோடி மிகவும் சிக்கலான நிலைக்கு தள்ளப்படும் சூழ்நிலை உருவாகும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

கடைசியாக இந்தியாவில் மிகப்பெரிய மாநிலங்களில் ஒன்றான உத்திரப் பிரதேசம் மாநிலத்தில் மோடி மற்றும் மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் ஆகியோர் பாபர் மசூதியை இடித்து விட்டு இராமர் கோயில் கட்டப்பட்டதையும், காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்து சட்டமான 370 பிரிவைச் நீக்கியது, முத்தலாக் சட்டத்தை நீக்கியது ஆகியவற்றை தங்கள் அரசின் சாதனையாக இந்து அடிப்படைவாத சித்தாந்தம் அடிப்படையில் மக்களை தூண்டி வாக்குகளை பெற்று விட திட்டம் வகுத்து வருகின்றனர்.

இந்த முறை இந்திய அரசியலில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான மதவாத தூண்டுதல் அரசியல் அவ்வளவாக எடுபடவில்லை என்பது எதிர் கட்சிகளுக்கு நிச்சயமாக ஒரு நல்ல விஷயம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

அதேநேரத்தில் இந்தியாவில் தற்போது நடைபெற போகும் தேர்தலில் எந்தவொரு அலையும் பெரிதாக காணப்படவில்லை.

இந்தியாவில் விலைவாசி உயர்வு, வேலையின்மை, தொழில் நிறுவனங்கள் உற்பத்தி முடக்கம், ஜி எஸ் டி வரி, நாட்டை உலுக்கி வரும் விவசாயிகள் போராட்டம் மோடி அரசின் மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்பதில் எந்த விதத்திலும் மாற்று கருத்து இல்லை என்பதே உண்மை. அதேநேரத்தில் தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் கால்பதிக்க பாரதிய ஜனதா கட்சியின் முயற்சிகள் இந்த முறை மிக கடுமையாக இருந்து வருகிறது . இந்தியாவில் வாழும் தமிழ் மக்களிடையே பாகஜ விற்கு எப்போதும் மிகப்பெரிய வரவேற்பு இருந்ததாக அறிய முடியவில்லை .குறிப்பாக தமிழ் நாட்டில் தந்தை பெரியார் மற்றும் திராவிட இயக்க கருத்தியலின் தாக்கம் அதிகமாக இருக்கும் நிலையில் வட இந்திய சனாதன இந்து அடிப்படைவாத சித்தாந்தம் முழுமையாக தோல்வியை சந்தித்து வருகிறது . குறிப்பாக தமிழ் நாட்டில் முஸ்லிம்கள் மற்றும் கிறித்தவ சமயத்தைப் சேர்ந்தவர்கள் முழுமையாக தி மு க விற்கு வாக்களிக்க மிகவும் முக்கியமான காரணம் இந்து சமய அடிப்படை வாதமாக இருந்து வருவதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது தான் திமுகவின் பலமான வெற்றிக்கு மூல காரணமாக அமைகிறது என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

தற்போதைய நிலையில் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் ஆன மதசார்பற்ற கூட்டணி பல்வேறு மாநிலங்களில் வலுவான சக்தியாக திகழ்வது ஆர் எஸ் எஸ் அமைப்பின் தலைமை மற்றும் நரேந்திர மோடிக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தி வருவதாக உளவு அமைப்பின் தற்போதைய கருத்து வெளியாகியுள்ளன என்று கூறப்படுகிறது.

இருப்பினும் இந்திய ஊடகங்கள் மீண்டும் பெரும்பான்மை வாக்குகளை பெற்று நரேந்திர மோடி மீண்டும் ஆட்சிக்கு வருவார் என்று திரும்ப, திரும்ப கூறி வருகின்றது. இது திட்டமிட்ட பரப்புரை என்று நீதியான நடுநிலை பத்ரிகையாளர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

அதேநேரத்தில் வாக்கு இயந்திரங்கள் மூலம் மோசடி நடக்க அதிக வாய்ப்பு உள்ளது என்று பொது நல வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் தீர்ப்பு ஒரு வேளை மோடி அரசின் நடவடிக்கை தடுக்கும் வகையில் இருக்கும் என்று நம்பப்படுகிறது. இது போன்ற சூழ்நிலையில் அவ்வளவு எளிதாக மோடி அதிகாரத்தை சுவைக்க முடியாது என்பதே தற்போதைய இந்திய அரசியல் மற்றும் தேர்தல் நடைமுறைகள் மூலம் நாம் உறுதியாக அறிந்து கொள்ள முடிகிறது.....!

# ஈகைப் பெருநாளாம் ஈதுல் பித்ர்!



பரீட் இக்பால்

இறை அருளையும் பாவ விமோசனத்தையும் அடைய தூ ண்டிக்கொண்டிருந்த ரமழான் எனும் விஷேட மகத்துவமான மாதத்தை வழியனுப்பி வைத்து கவலையில் ஆழ்ந்த இறை விசுவாசிகளுக்கு ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இறைவன் வழங்கிய மாண்பு மிக்க தினமே புனித நோன்புப் பெருநாள் தினமாகும்.

புனித ரமழான் பூராகவும் பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவெல்லாம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்கள் ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டவுடன் ஈதுல் பித்ர் எனும் ஈகைத் திருநாளை குதூகலமாக கொண்டாடுகின்றனர்.

ரமழானில் நன்மைகளைக் கொள்ளையிட்ட உள்ளங்கள் ஷவ்வால் மாத தலைப் பிறையுடன் ரமழானுக்கு விடை கொடுத்து விட்டு நோன்புப் பெருநாள் குதூகலத்தில் திளைக்கின்றன.

பெருநாள் தினம் என்பது சிறியோர், பெரியோர், ஏழை, பணக்காரன், முதியவர் என்ற எவ்வித பாகுபாடும் இன்றி மகிழ்ச்சியுடன் கழிக்கக் கூடிய தினமாகும். இப்பெருநாள் தினத்தில் நோன்பு நோற்பதை ஹராமாக்கியுள்ள இஸ்லாம் அல்லாஹ்வின் உவப்புக்குரிய வழிகளில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது.

பெருநாள் தினம் அல்லாஹ்வை ஞாபகமூட்டக் கூடிய, அவனைப் புகழக் கூடிய தினமாக இருக்க வேண்டுமே தவிர நற்செயல்களுக்கு மூட்டை கட்டும் தினமாக அமையலாகாது.

ஈதுல் பித்ர் பெருநாளில் அதிகமானளவு நன்மைகளை செய்ய நாம் முன்வர வேண்டும். நாம் மட்டும் பெருநாளைக் கொண்டாட அயல் வீட்டார் பெருநாளைக் கொண்டாட வசதியற்றவனாக இருப்பானேயானால் நாம் கொண்டாடும் பெருநாளில் என்ன தாற்பரியம் உண்டு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

வறிய மக்களின் துயர் துடைக்கும் பித்ரா என்ற கடமையுடன் பெருநாள் தொடங்குவதன் காரணமாகவே பித்ர் என்ற வார்த்தையுடன் சேர்ந்து ஈதுல் பித்ர் என்று இப்பெருநாள் அழைக்கப்படுகின்றது. பெருநாள் தினத்தில் இரவு, பகல் இரண்டு வேளைகளுக்கு தனக்கும் தனது பராமரிப்பிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் போதுமான அத்தியாவசிய வாழ்க்கை வசதிகளையுடைய ஒவ்வொரு முஸ்லிமும் இத்தகைய வசதிகள் அற்ற அல்லது வசதிகள் குறைந்த ஏழைகளுக்கு கட்டாயமாகக் கொடுப்பதற்குரிய நன்கொடையே ஸகாதுல் பித்ர் எனப்படும்.

பெருநாள் தினத்தன்று சகல முஸ்லிம்களும் சந்தோஷமாக உண்டு மகிழ வேண்டும், எவரும் பசியுடன் இருக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கு முதலாவதாகவும், பித்ராவை வழங்கும் ஒவ்வொருவரும் ரமழான் மாதத்தில் விட்ட பிழைகளுக்குப் பரிகாரமாகவும் ஸகாதுல் பித்ர் இருப்பதனால் நோன்பாளிகள் பரிசுத்தவான்களாக மாறுவதனால் தனியார்கள் நன்மை பெறுவது இரண்டாவது நோக்கமாகவும் திகழ்கின்றது.

ஒவ்வொரு முஸ்லிமின் செயல்கள் மற்ற சகோதர முஸ்லிம்களின் சுகதுக்கங்களில் பங்குபற்றக் கூடிய விதத்தில் அமைந்திருக்க வேண்டும். இந்த உண்மையை ஸகாதுல் பித்ர் அமைப்பு முறையிலும் காணக்கூடியதாக உள்ளது.

பெருநாள் தினத்தில் நாங்கள் எல்லோரும் அதிகாலையில் குளித்து, புத்தாடைகள் அணிந்து, நறுமணம் பூசி, அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இதே போன்று அன்றைய தினத்தில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு. ஒரு ஊரில் அல்லது மஹல்லாவில் வாழும் முஸ்லிம்கள் தனித்தனியாக அல்லது குழுக்களாக பிரியாமல் சகலரும் ஒன்று சேர்ந்து ஒரு திறந்த வெளியில் அல்லது மைதானத்தில் இது முடியாத போது ஒரு பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையை நடத்த வேண்டும்.

ஈதுல் பித்ர் தொழுகை முடிந்தவுடன் இமாம் நிகழ்த்தும் குத்பா உரையை அனைவரும் கேட்க வேண்டும். தொழுகையை போன்றே குத்பாவும் ஒரு இபாதத் என்பதை மறக்கலாகாது. இவ்வாறு ஒரு இமாமுக்குக் கட்டுப்பட்டு நடப்பதன் மூலம் முஸ்லிம் சமுதாய அமைப்பு வலுப்பெறுவதோடு தனிப்பட்ட ஒவ்வொரு முஸ்லிமும் பலவகையான நன்மைகளையும் அல்லாஹ்வின் அருளையும் பெறும் வாய்ப்பைப் பெறுகின்றனர். பெருநாள் தொழுகை முடிந்ததும் தான் சந்திக்கும் சகோதரர்களுக்கு "தகப்பலல்லா/ஹ மின்னி வமின்க" உங்களுடையதும் என்னுடையதும் நற்செயல்களையும் வாழ்த்துக்களையும் அல்லாஹ் அங்கீகரிப்பானாக! என்று கூறி வாழ்த்து தெரிவிப்பது சுன்னத்தாகும்.



பெருநாள் தினங்களில் உறவினர்கள், நண்பர்கள், மார்க்க ஊழியர்கள் அனைவரையும் கண்டு பேசி உபசரித்து, வாழ்த்துக் கூறி தங்களிடையே பற்றையும் பாசத்தையும் அன்பையும் ஆதரவையும் மென்மேலும் அதிகரித்துக் கொள்வதும் சிறந்த செயலாகும்.

இலங்கையில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களாகிய நாம் எமது பெருநாளின் சிறப்புக்களை மாற்று மத இனங்களுடன் பகிர்ந்துகொள்வதில் எந்தத் தவறுமில்லை. அவ்வாறு நாம் முன்மாதிரியாக நடந்து கொள்ளும் போதுதான் இந்த நாட்டில் இன நல்லுறவைக் கட்டியெழுப்ப முடியும். இப்பெருநாள் தினங்களில் பிற மதத்தவர்களுடன் குரோதம், விரோதம் ஏற்படாத வகையில் புரிந்துணர்வையும் சக வாழ்வையும் பெருநாள் காலங்களில் கட்டியெழுப்பும் முன்மாதிரியான நிகழ்ச்சிகளை அந்தந்த ஊர்களின் கழகங்கள், ஸ்தாபனங்கள், அமைப்புக்கள் ஏற்பாடு செய்வது வரவேற்கத்தக்க விடயமாக அமையும் என்பது சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாகும். இவ் எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்யும் பெருநாளாக அமைய அல்லாஹ்வை வேண்டுகிறோம்.

மேலும் இலங்கையில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களாகிய நாம் பெரும்பான்மையினருடனும் ஏனைய சிறுபான்மை சமூகங்களுடனும் பிரச்சினைகளிலிருந்து நீங்கி சமாதானமும் சகவாழ்வும் இனங்களுக்கிடையே சகிப்புத் தன்மையும் புரிந்துணர்வும் ஏற்படவும் அல்லாஹ் அருள் புரிவானாக. இலங்கையில் வாழும் முஸ்லிம்களாகிய நாம் ஏனைய சமூகங்களுடன் பிரச்சினையின்றி வாழவும் இந்நன்னாளில் அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்!

---



செ.திவாகரன் நானுஓயா



# புது நம்பிக்கையை ஏற்படுத்தும் புத்தாண்டு

இலங்கைத் திருநாட்டில் இரு மதத்தினருக்கு மட்டுமல்ல, இரு இனத்தினருக்கும் உரிய ஒரு பண்டிகையாக சிறப்பித்துச் சொல்லப்படும் வகையில் சித்திரைப் புதுவருடம் அமைந்துள்ளது. இந்து தமிழ் மக்களும், பௌத்த சிங்கள மக்கள் பொதுப்பண்டிகையாக சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள்

தமிழ் இனமானது ஒவ்வொரு வருடத்திலும் வரும் தமிழில் சித்திரை முதலாம் திகதியை வருடப்பிறப்பாக கொண்டாடும் நாளே தமிழ் புத்தாண்டு ஆகும்.

தமிழ் இனமானது கல்தோன்றா மண்தோன்றா காலத்திலேயே தோன்றியது என பெருமைப்படுத்தப்படுகின்றது. இதனாலேயே தான் "கல்தோன்றா மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி என போற்றப்படுகின்றது.

இத்தகைய பெருமைக்குரிய தமிழ் இனமானது ஒவ்வொரு வருடத்திலும் வரும் தமிழில் சித்திரை முதலாம் திகதியை வருடப்பிறப்பாக கொண்டாடும் நாளே தமிழ் புத்தாண்டு ஆகும்.

தமிழ் புத்தாண்டு ஏன் சித்திரையில் கொண்டாடுகிறார்கள் என்ற கேள்வியானது நம்மில் பலருக்கு எழுந்திருக்கும். அதற்கான காரணத்தை இப்போது காண்போம்.

உலகிலேயே ஆதிகாலம் தொட்டு வான சாஸ்திரத்தில் சிறந்து விளங்கியவர்கள் தமிழர்களே. சூரியனை மையமாக வைத்து தமிழர்கள் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்தனர். இதையே உலகின் பல்வேறு நாடுகளும் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தின.

புத்தாண்டு புது நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தக் கூடியது. புத்தாண்டு என்பது புதிய தொடக்கத்தைக் குறிக்கும் நாளாகும்.

மகிழ்ச்சி, கொண்டாட்டம், உறவினர்களின் ஒன்றுகூடல், சுபகாரியத் தொடக்கம் என பல மங்களகரமான நிகழ்வுகளை உள்ளடக்கியுள்ளது.

எனவே, இத் தமிழ்ப் புத்தாண்டு சாதாரண ஒரு பண்டிகை அல்ல அது வாழ்க்கைக்குத் தேவையான பல விடயங்களை கூறுகின்றது.

இவ்வாறு பல சிறப்புக்களைக் கொண்ட புத்தாண்டு போல தமிழரின் பெருமையை மறவாமல் நாடும், வீடும் செழித்து வாழ்வில் வளம் பெறுவோமாக.






நாச்சியாதீவு பர்வீன்

# "சிவசேகரம் கவிதைகள்"


-கெக்கிராவ ஸ*லைஹா-

என் குழந்தைப் பருவத்துத்
துயிற் பொழுதுகளில்
வண்ணத்துப் பூச்சிகள்
ஏராளமாகச் சிறகடிப்பன.
என் அம்மா
எனக்காகச் சேகரித்து வைத்த
வண்ணத்துப் பூச்சிகள்,
என் அம்மாவுக்கு
அம்மாவின் அம்மா
சேமித்துவைத்தவை.
என் குழந்தைகட்காக நான்
அவற்றைச் சேமித்து வைத்தேன்.
என் குழந்தைகள் வெடிமணம்
கமழும் இந்த இரவு வேளைகளில்
அலறுகின்றனர்.
என்
குழந்தைகளின்
வண்ணத்துப்
பூச்சிகளைக்
களவாடியது
யார்?
என்
குழந்தைகளின்
குழந்தைகளின்
துயிற்
பொழுதுகளுக்கு
நானன்றி
அவற்றை
மீட்டுத்தரப்போவது யார்?

"காணாமற்போன வண்ணத்துப் பூச்சிகள்" என்ற தலைப்பிட்ட, 1998 களில் அவர் எழுதிய மேற்படி கவிதை, அவரின் "வடலி" தொகுப்பில் வெளிவந்ததுவாய் இருக்கும். "சிவசேகரம் கவிதைகள்" என்று அவரின் 1973 முதல் 2020 வரையான ஒட்டுமொத்தக் கவிதைகளையும் கண்டடைகிறேன். ரவி பேலட் அவர்களின் தீர்க்க ஓவியம்.ப்பா கண்ணுக்குள் தாண்டவம் ஆடும் உயிர் அப்படியே சொட்டுகிறது அட்டை ஓவியத்தில்.... என்ன சொல்ல?

தீராத வாசிப்பை, அருந்தவக் கவனத்தைச் செலுத்த வேண்டிய ஒரு பெரும் புத்தகமாய் அது விருட்சித்துக் கிடக்கிறது கைகளில்..

சந்தர்ப்பவாத அரசியலுக்கு நெகிழ்ச்சியற்ற போக்குடைய, மார்க்ஸிய அரசியல் நிமித்தம் ஆதரவு தருகிற அரை நூற்றாண்டுக்கு மேல் பட்ட சிவானந்தம் சிவசேகரம் என்கின்ற மா பெரியவரின் உன்னத எழுத்தையும் உயர்ந்த




சிந்தனைகளையும் பற்றி நானென்ன பேச.. நானென்ன முடிக்க?

திருகோணமலையில் பிறப்பு. பொறியியல் பட்டதாரி. பொறியியல்துறை விரிவுரையாளர், பேராசிரியர்,கலாநிதி,

பேராதனை பல்கலைக் கழக இயந்திரப் பொறியியல் துறை தலைவர் என நிறைய கல்விசார் அடைவுகள்..

ஆங்கிலம்,தமிழ் என்று கவிதை, சிறுகதை, நாடகம், விமர்சனம், ஆய்வு இன்னபிற என முப்பத்து இரண்டு தொகுதிகளுமாய் அந்த பெரியவர் தொட்ட சிகரத்தை, கிட்டத்தட்ட சக பயணியாய் பேராசிரியர் நுஹ்மான் அவர்கள் "நதிக்கரை மூங்கில்" தொடங்கி அழகுற சொல்லி இருக்கிறார். இந்த சிறு குஞ்சு வாய் பிளக்கிறேன். எனக்கென்ன மொழியுளது சொல்லி முடிக்க?

லண்டன் சமூகம் இயல் பதிப்பகம் சுமார் 520 பக்கங்களில் கெட்டி அட்டையும் கொண்டு வெளிக் கொணர்ந்த புத்தகத்தை அக்கரைப் பற்று புத்தகக் கண்காட்சியில் வாங்கி வந்து வைத்திருந்தேன்."நம் காலத்தின் ஒருமுக்கிய பங்காளிப்பாளனுக்கு நாம்சொல்லும் நன்றி தான் இந்த நூல் என்று தன் பதிப்புரையில் தோழமையுடன் குயரணநச ஆயாசழழக சொல்லிக் கொள்வது, மிகவும் அன்புடன் பணிவுமாய் இருக்கிறது. பணி நிமித்தம் பாராட்டுக்கள் சொல்லிக்கொள்கிறேன். நூல் வடிவமைப்பு குறித்து,பா. ஜீவமணி அவர்களுக்கும்.வாழ்க நும் பணி..!!!

கவித்துவ ஆற்றல், வார்த்தையில் அடங்காத சொல் வளம் என்று நிரம்பி வழியும் இந்த செம்மை நூலை "இந்தா வாசித்தேன், இந்தா எழுதுகிறேன்" என்று புறப்பட்டு இருக்கும் ஒவ்வொரு இன்றைய இளைய தலைமுறை எழுத்தாளனும் பெற்று, தீரத் தீர வாசிக்கவே வேண்டும் என்று எனக்கே எனக்குமாயும் நான் சொல்லிக்கொண்டு விடுகிறேன்.. அன்பு, ஆறுதல், அரசியல், அங்கதம் என நிறைந்த அழகியல் பரிமாணங்கள் வழிகிறது வெள்ளம் போல நூலில்....

**இனி**

"சிவசேகரம் கவிதைகள்" கையில் ஒரு வேத நூலின் பாரத்துடன் கனக்கிற அதேநேரம், 520 பக்கங்களிலும் ஒரு கிளி இறகு பரவி நிற்பதுபோல மென்மையிலும் மென்மையாய் இரங்கவும் செய்கிறது...

"இந்த எழுத்தின் அச் சிறு உயிர்ப்பு எந்த அமர நிலையினும் உயரும்.."

என்று சிவானந்தம் சிவசேகரம் சொல்வாரே.. அதையே வாழ்த்தாய் சொல்லிக்கொள்கிறேன்.


# லண்டனில் உள்ள இலங்கை முஸ்லிம் இப்தார் நிகழ்வு















**லண்டனில் உள்ள இலங்கை முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பானது கொஸ்மோஸ் லண்டனில் உள்ள இலங்கை உயர்தானிகராலயமும் இணைந்து இப்தார் நிகழ்வொன்றை அண்மையில் நடத்தியது.**

## மனநலமும் ஆலோசனையும் 26

# மனப்பக்குவம்

எமது மனதில் தோன்றும் தீய எண்ணங்களாலும் மனதிற்கு வெளியே நடக்கும் மோசமான அவ்வாறே பாவமான விடயங்களாலும் எங்கள் மனம் சஞ்சலமோ குழப்பமோ அடையாமல் மனதை சமநிலையில் வைத்திருப்பது மனப்பக்குவம் ஆகும்.

மனிதராக பிறந்து வாழும் எமக்குள் தீய எண்ணங்கள் வருவதில்லை என்று எவராலும் சொல்ல முடியாது.

நல்ல எண்ணங்கள் மட்டுமே எமக்குள் உருவாகின்றன என்று எவராலும் கூறவும் முடியாது. நல்ல எண்ணங்கள் மட்டுமே உருவாகின்றன என்றால் எமக்கு வாழ்வதற்கான வழிகாட்டல்கள் தேவையில்லை. நாம் எப்போதும் புனிதர்களாகவே வாழ்ந்து விடலாம்.

மனிதர்களாகிய எங்களுக்கு உள்ளேயிருந்தும் வெளியே இருந்தும் பல விதங்களில் பல முறைகளில் தீங்கான எண்ணங்கள் ஏற்படுவது இயல்பானது. இவை தவிர்க்க முடியாதவை.

மனதுக்கு உள்ளே இருந்து வரும் தீய எண்ணங்களையும் வெளிப்புறமாக இருந்து வரும் தீய எண்ணங்களையும் புரிந்து அவற்றால் பாதிப்புகள் வராமல் மனதை பாதுகாத்துக் கொள்வது எமக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான திறனாகும்.

இது ஒவ்வொருவரும் கட்டாயம் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்.

இந்தத் திறன் "சலனமற்ற நிலையில் மனதை உறுதியாக வைக்க உதவும்". சிறந்த முறையிலான பயிற்சிகளின் மூலம் இந்த திறனை வளர்க்க முடியும். இந்த திறனை வைத்து எங்கள் எல்லோருடைய மனதையும் பக்குவப்படுத்தலாம். இதற்கான மிகச் சிறந்த பயிற்சிப் பாசறையாக இருப்பது புனித ரமழான் மாதம்.

ரமழானும் ரமழானில் நாம் செய்த வழிபாடுகளும் செய்யும் வழிபாடுகளும் நாம் வளர்த்துக் கொண்ட நல்ல நடத்தைகளும் அவற்றால் கிடைக்கும் நன்மைகளும் எங்கள் மனதை பக்குவப்படுத்துவதற்கான அழகான வாய்ப்புகளாகும்.

இந்த வாய்ப்புகளை பயன்படுத்தி மனப்பக்குவம் அடைந்த நல்லவர்களாக எம்மை ஆக்கிக் கொள்வோம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# முஸ்லிம் கவுன்சில் ஸ்ரீலங்கா ஏற்பாட்டில் சர்வதேச குத்ஸ் தினம்







**(அஷ்ரப் ஏ சமத்)**

முஸ்லிம் கவுன்சில் ஸ்ரீலங்கா ஏற்பாட்டில் சர்வதேச குத்ஸ் தினம் கடந்த 4ம் திகதி கொழும்பு 7 ல் உள்ள லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் கவுன்சிலின் தலைவர் என். எம். அமீன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக ஈரான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலாநிதி அலிரிசா டெல்காஸ் கலந்து கொண்டார் பிரதான உரையை ஜனாதிபதி சட்டத்தரனி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், முன்னாள் ஈரான் தூதுவர் எம்.எம். சுகையிர் நிகழ்த்தினார்கள்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பிணர்களான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், திலான் பெரேரா, சென்தோமஸ் வண.அருட்சகோதர் லயனல் பீரிஸ், மற்றும் களுப்பானபியரத்தின தேரர் ஆகியோர்களும் உரையாற்றினார்கள்.

இந் நிகழ்வு பலஸ்தீன நாடு முற்றுமுழுதாக சுதந்திரம் அடைதல், அந்த நாட்டில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்படல் வேண்டும். இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை போன்ற நாடுகளும் அமைப்புக்களும் முன்வந்து வழக்கு தாக்குதல் செய்தல் வேண்டும். உலக நாடுகள் இஸ்ரேல் உற்பத்தி மற்றும் அவர்களை முற்று முழுதாக வேறுபடுத்துதல். அவர்கள் செயற்பாடுகளுக்கு கண்டனக் குரல் சர்வதேச மட்டத்தில் எழுப்புதல். உலகில் இருந்து அவர்களை வேறுபடுத்தல் வேண்டும். அத்துடன் இஸ்ரேல் ஆதரவாக இருக்கும் நாடுகளுக்கு எதிராகவும் கண்டனக் குரல் எழுப்பல் வேண்டும்.

பலஸ்தீன் நாட்டினை ஜக்கிய நாடுகள் அமைப்பு உறுப்புரிமை நடாக்கி அந் நாட்டினை மீள கட்டியெழுப்புதல் வேண்டும். இதுவரை 40 ஆயிரத்திற்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கடந்த 6 மாதத்திற்குள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

அவர்களது சொத்து உடைமைகள் அழிக்கப்பட்டடுள்ள அவற்றினை மீள கட்டியெழுப்புதல் போன்ற பல்வேறு தலைப்புக்களில் மேற்சொன்ன பேச்சாளர்கள் உரையாற்றினார்கள் அத்துடன் முஸ்லிம் கவுன்சில் தீர்மாணம்மொன்றையும் வாசித்து வருகை தந்திருந்த அனைவரும் அதனை ஏற்றுக் கொண்டு உரிய நாடுகளுக்கும் ஜக்கிய நாடுகள் அமையத்திற்கும் அனுப்புவதாக ஏகமனதாக தீர்மாணிக்கப்பட்டது.

அத்துடன், பலஸ்தீன் சார்வாபக செயல்படும் தென் ஆபிரிக்கா, பலஸ்தீன் தூதுவர்கள், பாராளுமன்ற உறுப்பிணர் ஏ.எச்.எம். பௌபசி மற்றம சரவ மதத் தலைவர்களும் கலந்து கொண்டார்கள்.




**பயாஸா பாஸில்**

# நோன்புப் பெருநாளை எதிர்பார்த்துக் காத்திருக்கும் உங்களுக்காய் சில நிமிடம்....!!



*நோன்புப் பெருநாள் எம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.*

*ரமழான் மாதம் முழுவதும் நோற்ற நோன்புகளை பூரணப்படுத்தி பெருநாளை திருநாளாகக் கொண்டாடக் காத்திருக்கின்றோம்.*

*சந்திர சுழற்சியின் அடிப்படையிலேயே ரமழான் மாதம் நோன்பு ஆரம்பமாகிறது. அதேபோல், பெருநாள் தினமும் சந்திர சுழற்சியின் அடிப்படையிலேயே கணிக்கப்படுகிறது. முஸ்லிம்களின் மீது விதியாக்கப்பட்ட இந்நோன்பானது புலனடக்கத்தையும் மனஒருமைப்பாடு மற்றும் சுய கட்டுப்பாட்டையும் உருவாக்கும் சிறந்த ஆன்மீக பயிற்சியாக அமைந்திருக் கின்றது. முக்கியமாக இறையச்சத்தை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்பதையே அல்குர்ஆன் தெளிவு படுத்துகின்றது.*

**இப்பெருநாள் தினத்தின் கடமைகளாக:**

*1. தக்பீர் சொல்லுதல் (பிறை தென்பட்டதிலிருந்து தொழும்வரை மேலும் பெருநாள் தினம் முழுதும்)*

*2. குளித்து சுத்தமாகிக் கொள்ளல்.*

*3. அல்குர்ஆன் ஓதுதல் , ஸலவாத்து சொல்லல் , சுன்னத்தான தொழுகைகளில் ஈடுபடுதல்.*

*4. புத்தாடை அணிதல் இல்லாவிட்டால் சுத்தமான அழகிய ஆடை அணிதல்.*

*5. அதிகமதிகம் தர்மம் செய்தல்.*

*6. பெருநாள் தொழுகையிலும் குத்பாவிலும் கலந்து கொள்ளல்.*

*7. ஆண்கள் மணம் பூசுதல் (பெண்கள் வீட்டில் பூசலாம்)*

*8. ஸகாத்துல் பித்ர் கொடுத்தல்.*

*ரமழான் மாதத்தை தொடர்ந்து ஷவ்வால் மாதத்தின் தலைப்புறை தென்பட்டதும் நோன்பு பெருநாளை கொண்டாடுவோம். ஒரு மாத காலம் பசித்திருந்து, தாகித்திருந்து, புலன்களை கட்டுப்படுத்தி நோற்ற நோன்பின் கடமையை நிறைவேற்றிய மகிழ்ச்சியை கொண்டாடுவது இப்பொருநாள் ஆகும்.*

*எனவே நல்ல முறையில் நோற்ற நோன்பினை சிறப்பான முறையில் பூரணத்துவப்படுத்தி பெருநாளையும் சிறப்பாகக் கொண்டாட வல்லவன் ரஹ்மான் அருள் புரிவானாக....!!*

# கருத்து சுதந்திரத்திற்கு எடுத்துக்காட்டான ஞானசார தேரர் மீதான தீர்ப்பு



எம்.எஸ். அமீர் ஹுசைன்



பேச்சு, எழுத்து, கருத்து வெளிப்பாட்டு மற்றும் அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கான சுதந்திரம் இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு யாப்பின் பிரிவு 14 (1) மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால் அவை அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றது. அதே நேரம் அரசியல் அமைப்பின் அத்தியாயம் மூன்றின் பிரிவு 10 மூலம் ஒருவர் தாம் விரும்பும் மதத்தை பின்பற்றுவதற்கும் நம்பிக்கையை உடையவராக இருப்பதற்கும் சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியை பின்பற்றும் சுதந்திரம் மத சுதந்திரம் என்பன உறுதிப் படுத்தப்பட்டிருக்கின்றது. அதன் அடிப்படையில் இந்த உரிமைகள் மீறப்படும் போது அதற்கான நியாயத்தை வழங்க உயர் நீதிமன்றம் இருக்கின்றது. அடிப்படை உரிமை மீறல் மனு சமர்ப்பிக்கப்படுகின்ற போது அதனை பரிசீலனை செய்வதும் அரசியல் அமைப்பால் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதும் உயர் நீதிமன்றத்தின் கடமையாக இருந்து வருகின்றது. அந்த வகையில் இலங்கையில் அடிக்கடி அடிப்படை உரிமை மீறல் மனுக்கல் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான தீர்ப்புகள் வழங்கப்படுவது மரபாகும்.

2024 மார்ச் மாதம் 28 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் மீதான வழக்கில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை எழுதியது. ஞானசார தேரர் மீதான வழக்கில் இரண்டு குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதால் 04 வருட கடூழிய சிறைத் தண்டனையும் 100,000 ரூபா அபராதமும் விதிக்கப் பட்டது. குறித் அபராதத் தொகையை செலுத்தத் தவறினால் மேலும் இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. உயர் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்பெந்தி இந்த தீர்ப்பை வழங்கினார். அதன்படி ஞானசார தேரர் இந்த தீர்ப்பு வழங்கப்பட்ட அதே தினம் 28 ஆம் திகதி வெளிக்கடை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டதாக சிறைச்சாலை ஆணையாளர் துஷார உபுல்தெனிய உறுதிப்படுத்தினார். எனினும் பின்னர் 30 ஆம் திகதி சுகயீனமுற்று சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் ஞானசார சேர்க்கப்பட்டுள்ளார்.

2016 ஆம் ஆண்டு கூறகல தொடர்பாக செய்தியாளர் மாநாடு நடத்தி உலகம் பூரவும் வாழுகின்ற முஸ்லிம்களால் பின்பற்றப்படுகின்ற இஸ்லாம் மதத்தையும் அவர்களால் வணங்கப்படுகின்ற இறைவனாகிய அல்லாஹ்வையும் இழிவுபடுத்தி தூசிக்கும் வகையில் மிக மோசமான கருத்து வெளியிட்டமையே ஞானசார தேரர் மீதான குற்றச்சாட்டாகும். இவ்வாறான கருத்தை வெளியிட்டமையால் நாட்டில் இனங்களுக்கிடையில் மத அமைதியின்மைக்கும் சகவாழ்வுக்கும் அச்சுறுத்தலையும் பாதிப்பையும் ஏற்படுத்தினார் என்ற அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அவர் மீதான இரண்டு குற்றச்சாட்டுக்களும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப் பட்டதால் குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 291 (அ) வின் கீழ் நீதிமன்றம் இந்த தண்டனையை வழங்கி இருக்கின்றது.

கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் மற்றும் அசாத் சாலி ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தனர். எவ்வாறாயினும் ஞானசார தேரர் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்ட மனத்தாங்களுக்கு பகிரங்கமாக மன்னிப்பு கோரிய போதும் மதகுரு என்ற ஸ்தானத்தில் இருக்கும் ஒருவர் பயன்படுத்தும் வார்த்தைகளை மிகவும் பொறுப்புணர்வுடன் வெளிப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்ட நீதிபதி சந்தர்ப்ப சூழ்நிலையால் இவ்வாறான கருத்தை வெளியிட்டதாக கூறி இலேசான முறையில் குற்றச்சாட்டில் இருந்து கலன்று விட முடியாது என்று சுட்டிக்காட்டி உள்ளார். அத்துடன் இவர் சிறைக் கூண்டில் இருந்து கொண்டு மன்னிப்பு கோரியபோதும் குற்றச்சாட்டை மறுக்கவில்லை.

ஞானசார தேரர் மீது இவ்வாறு சிறைத்த தண்டனை விதிக்கப்பட்டது இது முதல் தடைவ அல்ல. ஏற்கனவே 2016 ஆம் ஆண்டு கங்கொடவில நீதிமன்றத்தில் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் எக்னெலிகொட தொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த போது கங்கொடவில நீதிமன்றத்திற்குள் கும்பல் ஒன்றுடன் புகுந்து நீதிபதியை அச்சுறுத்தி குழப்பம் விளைவித்தமை தொடர்பான குற்றச்சாட்டில் குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்ட போது அவருக்கு 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி 06 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 19 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த சிறைத் தண்டனையை ஒரு வருட காலம் அனுபவித்து வந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா 2019 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதி ஜனாதிபதியின் பொது மன்னிப்பை வழங்கி விடுதலை செய்தார்.

இந்த ஞானசார தேரர் 2010 ஆம் ஆண்டு முதல் இலங்கை வாழ் முஸ்லிம்களை தொடர்ச்சியாக பலவேறுவிதமான இன்னல்களுக்கும் தொந்தரவுகளுக்கும் ஆளாக்கி வந்துள்ளார். பௌத்த பிக்கு என்ற காவி உடை கௌரவத்தையும் சிறப்புரிமையையும் பயன்படுத்தி பொலிசாரும் ஏனைய சட்ட நிறுவனங்களும் நடவடிக்கை எடுக்க முடியாது என்ற அடிப்படையில் அந்த உரிமையை பயன்பத்தி பகிரங்கமான கூட்டங்கள் மூலமும், செய்தியாளர் மாநாடுகளை நடத்தி பகிரங்க ஊடகம் மூலமும் சமூக ஊடகங்களை பயன்படுத்தி வெறுப்பூட்டும் பேச்சுக்கள் வாயிலாகவும் முஸ்லிம்களையும் அவர்கள் வணங்கும் அல்லாஹ்வையும், இறைத் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களையும் முஸ்லிம்களால் பின்பற்றப்படுகின்ற புனித அல்குர்ஆனையும் அவமதித்து இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிடுவது ஞானசார தேரரின் வாழ்வியல் தத்துவமாக இருந்து வந்தது.

அவரின் இவ்வாறான போக்கு காரணமாக சிங்கள சமூகத்தில் குறிப்பாக இனவாத அரசியலை அரங்கேற்றி வந்த அப்போதைய ஆட்சியாளர்களான மஹிந்த ராஜபக்ஷ, கோதாபய ராஜபக்ஷ ஆகியோர் முன்னிலையில் ஒரு வீரராக காட்சியளித்தார். அவர்கள் ஞானசாரரின் இத்தகைய நடவடிக்கைகளால் உச்ச பயனை அடைந்தனர். 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் அதிகப்படியான வாக்குகளையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களையும் பெற இத்தகைய இனவாத முன்னெடுப்பு காரணமாகின.

முஸ்லிம்களுக்கு எதிரான அலுத்கமை வன்முறை, திகனை கலவரம், நிகவெரட்டிய வன்முறை, குருணாகலை பிரதேசத்தில் அவ்வப்போது முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள், தெவனகலை விவகாரம், கூறகலை ஜெய்லானி முரண்பாடு என்று இந்த ஞானசார தேரரின் அட்டகாசங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அத்தனையையும் இலங்கை அரசியல் அமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பேச்சு, எழுத்து, கருத்து வெளிப்பாட்டு மற்றும் கூட்டம் கூடும் உரிமையை பயன்படுத்தி அதனை துஷ்பிரயோகம் செய்யும் வகையில் பரப்பிய மத அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களால் ஏற்பட்ட மோசமான விளைவாகும். அவரது கருத்துக்களால் அப்பாவி சிங்கள இளைஞர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டப்பட்டமையே வன்முறைகளுக்கு அடிப்படை காரணமாக அமைந்தன.

அந்த வகையில் உயர் நீதிமன்றம் வழங்கி உள்ள இந்த தீர்ப்பானது பிரசைகள் என்ற வகையில் அவர்கள் எந்த தரத்தில் இருந்தாலும் எந்த இனத்தை சேர்ந்தவர் களானாலும் அவர்களது அடிப்படை உரிமையாக பெற்றுள்ள பேச்சு, எழுத்து, கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை மிகவும் பொறுப்புணர்வுடன் பயன்படுத்த வேண்டும். அந்த சுதந்திரத்தை முறைகேடாகவும் பொறுப்பற்ற விதத்திலும் பயன்படுத்தும் போது ஏற்படக்கூடிய மோசமான விளைவுகளுக்கு அந்த கருத்தை வெளியிட்டவர்களே பொறுப்பாக வேண்டும் என்ற அடிப்படையில் இந்த 04 வருட கடூழிய சிறைத் தண்டனை அமைகின்றது. ஏற்கனவே ஒன்லைன் பாதுகாப்பு ஒழுங்குபடுத்தல் சட்டம் நிறைவேற்றப் பட்டமையும் இவ்வாறான பின்னணியில் ஆகும். அத்துடன் அரசியல் அமைப்பின் பிரிவு 15 இல் இருந்து 15 (7) உப பிரிவுகள் வரையில் இந்த கருத்துச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பது இதுபோன்ற காரணங்களால் என்பதை அனேகமானவர்கள் அறியாமல் உள்ளனர்.

இன்றைய காலகட்டத்தில் சமூக ஊடகங்களின் வரவு மரபு ரீதியான ஊடகங்களை விட மக்கள் மத்தியில் மிக விரைவாக தாக்கத்தையும் பொதுமக்கள் அபிப்பிர யத்தை கட்டியெழுப்பும் கடமையையும் செய்து கொண்டிருப்பதால் அதனை தவறான முறையில் அல்லது துஷ்பிரயோகம் செய்யும் வகையில் கையாள்வதால் நாட்டில் மோசமான விளைவுகள் ஏற்படுவதை தடுப்பது அவசியமான தேவையாக இருந்து வருகின்றது. அதன் காரணமாகவே அரசாங்கம் சில வாரங்களுக்கு முன்னர் ஒன்லைன் பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்றியது. அந்த சட்டம் பேச்சு எழுத்து மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை சில பிரிவுகள் வாயிலாக கட்டுப்படுத்துவதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் இன்னுமொரு பக்கத்தில் ஞானசார தேரர் போன்றவர்களது கருத்து சுதந்திர துஷ்பிரயோகத்தை அடக்க மிகவும் பயனுள்ள சட்டமாகும்.

இலங்கை போன்ற பல்லினங்கள் வாழும் இருமொழி கலாச்சாரம், பண்பாட்டை கொண்ட நாட்டில் இந்த நாடு ஒரு இனத்திற்கு மாத்திரம் சொந்தமானது, ஏனைய இனங்களுக்கு எந்தவிதமான உரிமைகளும் இல்லை என்ற கருத்தை பரப்பி மக்கள் மத்தியில் அமைதியின்மையையும் இனங்களுக்கிடையிலான முரண்பாட்டையும் ஏற்படுத்தக்கூடிய நிலைமைகள் அதிகமாக காணப்படுவதால் இதுபோன்ற பலமான சட்டங்களின் தேவை அவசியமாகின்றது. கிழக்கு மாகாணத்தில் இதேபோன்று துள்ளிக் குதிக்கும் அரச அதிகாரிகள், எந்த தராதரம் என்று பாராமல் இனவாத அடிப்படையில் மிக மோசமான முறையில் கருத்துக்களை கக்கி வரும் அம்பிடிய சுமனரத்ன தேரரும் ஒருவராவார். இவர் எத்தகைய அதிகாரிகளை தூசித்தாலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இவர் வாழும் பிரதேசத்தில் அமைந்துள்ள அரச அலுவலகங்களுக்குள் புகுந்து அச்சுறுத்தல் விடுத்தாலும் அவர் மீது எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் இருந்து வருவது இன்னுமொரு அச்சுறுத் தலாகும்.

எனவே நாட்டில் சட்டங்கள் இருப்பது இவ்வாறான மேலதிக்க சிந்தனையுடன் செயற்பட்டு ஓர் இனத்தை மற்றுமோர் இனம் நசுக்கி அடக்கி ஒடுக்க முடியும் என்ற தீவிர போக்கில் மக்களை தூண்டி சண்டியர்களாவதை தடுப்பதற்காகவாகும். அதனால் இத்தகைய நிலைமைகளை முடிவுக்கு கொண்டு வர ஞானசார தேரருக்கு எதிராக வழக்கு தொடக்கப்பட்டது போன்று சட்டத்தில் இருக்கின்ற பிரிவுகள் மூலம் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக சிவில் சமூகம் முன்வராவிட்டால் அது பாரிய ஆபத்தை ஏற்படுத்துவதாக அமைகின்றது. அவ்வாறே சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற தத்துவம் கடைபிடிக்கப்படுகின்ற போதும் அது சில சந்தர்ப்பங்களில் அரச அதிகாரிகளால் மீறப்படுகின்ற நிலைமைகளையும் அவதா னிக்க முடிகின்றது.

தேர்தல் காலம் மிக முக்கியமான காலப்பகுதியாகும் வாக்கு வேட்டைக்காக இவ்வாறு வெறுப்பு பேச்சுக்களை பரப்பி சுய நல அரசிலை அரங்கேற்ற முற்படும் அரசியல் வாதிகள் ஞானசார தேரர் மீதான தண்டனை குறித்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். முஸ்லிமானாலும் தமிழரானாலும் யாராக இருந்தாலும் தமது கருத்துக்களால் ஏனைய மதங்கள், இனங்கள், சமூகங்கள் அல்லது தனிநபர்களாக இருந்தாலும் தூ சிக்கப்படுவது சட்டத்தால் தடுக்கப்பட்டதாக அமைகின்றது. ஏற்கனவே இந்த ஞானசார தேரர் சிங்கள பௌத்த சமூகத்தில் காணப்படுகின்ற பொருளாதார பிரச்சினைகள், குடும்ப வன்முறைகள், பெண்கள் மீதான அடக்குமுறைகள், மதுபானத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு என்று எதையுமே கண்டுகொள்ளாமல் வெறுமனே முஸ்லிம்களை சிங்கள சமூகத்திற்கு மோசமான இனமாக காட்டுவதையே குறிக்கோளாக கொண்டு செய்றப்பட்வர்.

எதுவானாலும் யாராக இருந்தாலும் கருத்துச் சுதந்திரத்தை மக்களை பாதிக்கும் வகையில் அல்லது இனங்களுக்கிடையில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது என்பதற்கு ஞானசார தேரர் மீதான வழக்கு தீர்ப்பு சிறந்த எடுத்துக் காட்டாக அமைகின்றது. பரவலாக மரபு ரீதியான ஊடகங்களை விட சமூக ஊடகங்களை பயன்படுத்தியே பாதிப்பை ஏற்படுத்தும் கருத்துக்களை பரப்ப இலகுவான நடைமுறை காணப்படுகின்றது. அதனால் கருத்துக்களை வெளிப்படுத்துபவர்கள் குறித்து மக்களும் மிகவும் அவதானத்துடனும் நடந்துகொள்ள வேண்டும். எதிர்வரும் காலம் தேர்தல் காலம் என்பதால் ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள் போன்றவர்களும் அரசியல் இலக்குகளை அடைவதற்காக வெளிப்படுத்துகின்ற கருத்துக்களை அதன் பாரதூரம் அறிந்து பேச வேண்டிய தேவையும் இருக்கின்றது. அதற்கு ஞானசார தேரர் மீதான தீர்ப்பு நல்லதொரு படிப்பினையாகும்.



அரபாத் பஹர்தீன்

# சம்பியனானார் டேனியல் காலின்ஸ்



சார்லஸ்டன் ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் டேனியல் காலின்ஸ், ரஷ்யாவின் டாரியா கசட்கினாவை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் டேனியல் காலின்ஸ் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 6:2, 6:1 என்ற நேர் செட் கணக்கில் டாரியா கசட்கினாவை வீழ்த்தி டேனியல் காலின்ஸ் நடப்பாண்டின் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

**இமாத் மற்றும் ஆமீருக்கு வாய்ப்பு**

சுற்றுலா நியூஸிலாந்து அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடருக்கான பாபர் அஸாம் தலைமையிலான பாகிஸ்தான் குழாம் இன்றைய தினம் அறிவிக்கப்படவுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இக் குழாத்தில் சர்வதேச கிரிக்கெட்டிற்கு ஓய்வு கொடுத்து மீண்டும் இணைந்து கொண்ட இமாத் வசீம் மற்றும் முஹம்மது ஆமீர் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்படலாம்

**நெதர்லாந்து வீரர் வெர்ஸ்டப்பென் முதலிடம்**

போர்முலா 1 காரோட்டப் போட்டி உலகம் முழுவதும் 24 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் 4ஆவது சுற்றான ஜப்பான் கிராண்ட்பிரி போட்டி அங்குள்ள சுசூகா ஓடுதளத்தில் நேற்று நடந்தது. இதில் 307 கிலோ மீட்டர் தூரத்தை நோக்கி 10 அணிகளை சேர்ந்த 20 வீரர்கள் பங்கேற்றிருந்தனர். நடப்பு சம்பியனான நெதர்லாந்தின் மேக்ஸ் வெர்ஸ்டப்பென் ரெட்புல் அணி சார்பில் போட்டியிட்டு போட்டித் தூரத்தை 1 மணித்தியாலம் 54 நிமிடம் மற்றும் 23.566 வினாடிகளில் நிறைவு செய்துஇ அதற்குரிய 26 புள்ளிகளை தட்டிச் சென்றார். இந்த சீசனில் அவரது 3ஆவது வெற்றி இதுவாகும்.

**பளுதூக்கலில் சாதனை படைத்த ஹன்சானி**

தாய்லாந்தில் இடம்பெற்றுவரும் உலக பளுதூக்கும் சம்பியன்ஷிப் போட்டியில் ஹன்சானி கோமஸ் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 49 கிலோ எடைப் பிரிவில் போட்டியிட்ட ஹன்சானி கோமஸ், ஸ்னாட்ச் முறையில் 76 கிலோ எடையை தூக்கி புதிய இலங்கை சாதனையை நிகழ்த்தினார். இப் போட்டி நிகழ்ச்சி ஒலிம்பிக் தகுதிப் போட்டியாகவும் அமைகிறது.

# இங்கிலாந்து ப்ரீமியர் லீக் தொடர். மென்.யுனைடெட் எதிர் லிவர்பூல் ஆட்டம் சமநிலை



நடப்பாண்டின் இங்கிலாந்து ப்ரீமியர் லீக் உதைப்பந்தாட்டத் தொடரின் மென்செட்டர் யுனைடெட் மற்றும் லிவர்பூல் கழகங்களுக்கு இடையிலான 31ஆவது வார லீக் ஆட்டம் 2:2 என்ற கோல்கள் அடிப்படையில் சமநிலை பெற்றமையால் லிவர்பூல் கழகம் தரப்படுத்தலில் 2ஆவது இடத்தில் நீடிக்கின்றது.

உலகின் முன்னனி கழகங்களுக்கிடையிலான உதைப்பந்தாட்டத் தொடரான இங்கிலாந்து ப்ரீமியர் லீக் தொடரில் புகழ்பெற்ற 20 கழகங்கள் பங்கேற்றுள்ளன. இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தரப்படுத்தலில் 2ஆம் நிலையிலுள்ள பலமிக்க லிவர்பூல் கழகம் அதே சமபலம் கொண்ட மென்செஸ்டர் யுனைடெட் கழகத்தினை ஓல்ட் ட்ரபோர்ட் அரங்கில் எதிர்த்தாடியது.

முன்னனி கழகங்கள் என்பதால் மைதானம் ரசிகர்களால் முழுமையாக நிரப்பப்பட்டிருந்தது. போட்டியின் முதல் பாதி ஆட்டம் இரு கழக வீரர்களால் முழுமையாக ஆளப்பட பந்து இரு கோல்கம் பங்களையும் சென்று வந்தது. இருப்பினும் போட்டியின் 21ஆவது நிமிடத்தில் டர்வின் நுனேஸ் கொடுத்த பந்துப் பரிமாற்றத்தை பெற்ற லூயிஸ் டயஸ் பந்தை கம்பத்தினுல் செலுத்த முதல் கோலை பதிவு செய்து முதல் பாதியில் 1:0 என முன்னிலை பெற்றது லிவர்பூல் கழகம்.

பின்னர் இடம்பெற்ற தீர்மானமிக்க 2ஆவது பாதி ஆட்டத்தில் பதில் கோலுக்காக மென்செஸ்டர் கழக வீரர்கள் முனைப்புக் காட்டினர். இதன் விளைவாக போட்டியின் 50ஆவது நிமிடத்தில் ப்ருனோ பெர்ணான்டஸ் அசத்தல் கோலை உட்செலுத்த ஆட்டம் 1:1 என சமநிலை பெற்றது. பின்னர் 67ஆவது நிமிடத்தில் அரோன் வேன் பிசாக்கா கொடுத்த கோலுக்கான பந்துக் கடத்தலை கம்பம் நுழைத்த கபி மைனோ மென்செஸ்டர் கழகத்தை 2:1 என முன்னிலை பெற வைத்தார்.

தொடர்ந்த ஆட்டத்தில் லிவர்பூல் கழகம் சமநிலை கோலுக்காக தீவிரம் காட்டியது. இருப்பினும் அவர்களால் எதிரணி கோல் கம்பத்தினுள் நுழைய முடியவில்லை. இருப்பினும் போட்டியின் 84ஆவது நிமிடத்தில் வைத்து மென்செஸ்டர் கழகத்தின் தடுப்பு வீரர்கள் தவறிலைக்க லிவர்பூல் கழகத்திற்கு பெனால்டி உதைக்கான வாய்ப்புக் கிடைத்தது. அதனை ஏற்கு கம்பத்தினுள் அனுப்பி வைத்த முஹம்மது சலாஹ் போட்டியை 2:2 என சமநிலைக்கு மாற்றினார்.

பின்னர் இடம்பெற்ற ஆட்டத்தில் மேலதீக கோல்கள் செலுத்தத் தவற போட்டி 2:2 என சமநிலை பெற்றது. இந்த சமநிலையால் லிவர்பூல் கழகம் தரப்படுத்தலில் தொடர்ந்தும் 2ஆவது இடமத்தில் நீடிக்கிறது .இருப்பினும் வெற்றியைத் தவறவிட்ட மென்வெஸ்டர் கழகம் தரநிலையில் 6ஆம் இடத்திலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அல் அக்ஸா அஹதியாவின் பரிசளிப்பு விழாவும், இப்தார் நிகழ்வும்



கல்பிட்டி அல் அக்ஸா அஹதிய்யா சன்மார்க்க போதனா பீடத்தின் பரிசளிப்பு விழாவும், இப்தார் நிகழ்வும் நேற்று (7) இடம்பெற்றது.

கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் அஹதிய்யா சன்மார்க்க போதனா பீடத்தின் வருடாந்த கலை போட்டி நிகழ்வுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வுடனான இப்தார் நிகழ்வு அல் அக்ஸா அஹதிய்யாவின் அதிபர் திருமதி எம். ஆர்.எஸ். நிஹாரா ரியால்தீன் தலைமையில் அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் கலை போட்டி நிகழ்வில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவ மாணவிகளின் கிராத், பேச்சு, ஹசீதா மற்றும் வினா விடை போன்ற நிகழ்ச்சிகள் மேடையை அலங்கரித்திருந்தது. அத்துடன் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களுடன் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், போட்டி நிகழ்வில் பங்கேற்ற அத்தனை பேருக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் இந்நிகழ்வின் சிறப்பு அதீதிகளாக பங்கேற்ற அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி சாஜினாஸ் விசேட உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து அஹதிய்யா சன்மார்க்க போதனா பீடத்தின் புத்தள மாவட்ட சம்மேளனத்தின் மேற்பார்வையில் தலைவரான திரு ரியாஸ் ஆசிரியர் அஹதிய்யா தொடர்பில் விளக்கம் அளிக்கும் உரையினை நிகழ்த்தியிருந்தார்.

பின்னர் இப்தார் நிகழ்வு இடம்பெற்று 7 மணியளவில் அல் அக்ஸா அஹதிய்யா சன்மார்க்க போதனா பீடத்தின் பரிசளிப்பு விழாவுடனான இப்தார் நிகழ்வு நிலைவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்நிகழ்விற்கு அஹதிய்யா மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.



# ஏத்தாளை சமுர்த்தி வங்கியில் நல்லிணக்கத்திற்கான இப்தார் நிகழ்வு

ஏத்தாளை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் வருடாந்த இப்தார் நிகழ்வு நேற்று (05) வங்கியின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. கல்பிட்டி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஏத்தாளை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் ஊழியர்கள் பங்கேற்ற இவ் இப்தார் நிகழ்வு பதில் முகாமையாளர் ஏ.ஜி. திலகரட்ன தலைமையில் இடம்பெற்றது. வங்கியில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் சமுர்த்தி கள உத்தியோகத்தர்கள் என அனைவரும் பங்கேற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் முஸ்லீம்களின் நோன்பு தொடர்பான விளக்கத்தினை ஏத்தாளை சமுர்த்தி வங்கியின் கள உத்தியோகத்தர்களின் தலைவரான பாலித பெர்ணான்டோ சிங்கள மொழியில் வழங்கியிருந்தமை சிறப்பம்சமாகும்.

# உலகக்கிண்ணத்திற்காய் ஐ.பி.எல் தொடரை கைவிட்ட வனிந்து ஹசரங்க



இலங்கை ரி20 அணியின் தலைவரும், உலகின் முன்னனி சுழல்பந்து வீச்சாளருமான வனிந்து ஹஸரங்கவிற்கு இடம்பெற்றுவரும் 17ஆவது இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இது குறித்து இந்திய கிரிக்கெட் சபைக்கு கடிதம் எழுதி உள்ளதாகவும் இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரின் 17ஆவது அத்தியாயம் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், நடப்பு இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் பல்வேறு நட்சத்திர வீரர்கள் காயம் மற்றும் தனிப்பட்ட காரணங்களால் விலகியுள்ளனர்.

அந்தவகையில் நடப்பு இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்காக விளையாட ஏலம்எடுக்கப்பட்டிருந்த இலங்கை ரி20 அணியின் தலைவரும் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளருமான வனிந்து ஹஸரங்க காயம் காராணமாக நடைபெற்றுவரும் இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

அண்மையில் நிறைவுக்கு வந்த பங்காளதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரின்போது இடது குதிகால் பகுதியில் காயமடைந்த வனிந்து ஹஸரங்க, இலங்கை கிரிக்கெட் சபை மருத்துவக் குழுவின் ஆலோசனைக்கு அமைய எதிர்வரும் ஜ/ன் மாதம் முதலாம் திகதி மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இடம்பெறவுள்ள இருபதுக்கு இருபது உலகக் கிண்ணத்தில் பங்கேற்பதை கருத்தில் கொண்டு நடப்பாண்டின் இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் பங்கேற்பதை தவிர்த்துக் கொண்டுள்ளார்.

இதனிடையே, கடந்த சில நாட்களுக்கு முன்பு வனிந்து ஹசரங்க மேலும் மருத்துவ ஆலோசனை பெறுவதற்காக டுபாய் சென்றிருந்தார். இதன்போது இந்த ஆண்டு இடம்பெற்றுவரும் இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் பங்கேற்காமல் ஓய்வில் இருக்க வேண்டும் என மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளதுடன், அவர் பூரண குணமடைய புனர்வாழ்வு மற்றும் ஓய்வில் காலத்தை செலவிட வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.